2017 மார்ச் 29
புதன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 29 | பக்கங்கள் 12 | மணி 03 | ஒளி 051

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY
නවමණී දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்



விக்டர் ஐவன் தலைமையில் வேகமாக வளர்ந்து வரும் மறுமலர்ச்சி இயக்கம்
04 »



23 வயதுக்குட்பட்ட ஆசிய கிண்ணம்; இலங்கைக்கு முதல் வெற்றி
12 »

## அதிகாரப் பகிர்வில் கூட்டமைப்பு திருப்தி

■ அ. அருண் பிரசாந்த்



புதிய அரசமைப்பு தொடர்பிலான இடைக் கால அறிக்கையில் சுட்டிக்காட் டப்பட் டுள்ள அதி காரப்பகிர்வு விடயம் குறித்து
11 »»»»

# புதிய வில்பத்து பிரகடனம்:
# முசலி மக்கள் பெரிதும் பாதிப்பு

## இரத்து செய்யுமாறு றிஷாத் ஜனாதிபதிக்கு கடிதம்





பாதுகாக்கப்பட்ட வில்பத்து வனப் பிரகடனம் முசலிப் பிரதேச மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதனால் குறித்த வர்த்தமானியை உடனடியாக இரத்துச் செய்யுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின்
11 »»»»

## சதொச கிளை அங்குரார்ப்பணம்



சித்திரைப்புத்தாண்டுக்கு முன்னர் நாடலாவிய ரீதியில் 50 சதொச கிளைகளை நிறுவும் அங்குரார்ப்பண வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்று கொஹுவலையில் சதொச கிளை திறந்து வைக்கப்பட்டது.

கைதொழில் வர்த்தக அமைச்சர் றிஷாத் பதியுதீன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌசி பாரளுமன்ற உறுப்பினர் மரிக்கார் உட்பட சதொச உயர் அதிகாரிகள் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## இனவாதிகளுக்கு சார்பாக ஜனாதிபதி மைத்திரி

### முஜிபுர் ரஹ்மான் குற்றச் சாட்டு



1990 ஆம் ஆண்டு விடுதலை புலிகளினால் வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப் பட்ட முஸ்லிம்களின் கருத்துக்களுக்கு செவிசாய்க்காது, வில்பத்து வனம் தொடர்பிலான வர்த்தமானியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையொப்பமிட்டுள்ளார். அவர் இனவாதிகளுக்கு சார்பாக ஒருதலைபட்சமாக செயற்பட்டிருக்கிறார். எனவே அவர் அதனை உடனடியாக வாபஸ்பெற வேண்டும் என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதே வேளை,
11 »»»»

## இரத்த அழுத்தத்தால் விமல் பாதிப்பு

■ அ. அருண் பிரசாந்த்

சிறைச்சாலையில் உண்ணா விரதமிருக்கும் ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினரான விமல்வீ ரவன்சவுக்கு இரத்த அழுத்தம் மற்றும்
11 »»»»

## குற்றத் தடுப்பு பிரிவில் பஷீர் வாக்குமூலம்

### தாருஸ்ஸலாம் மறைக்கப்பட்ட மர்மங்கள் குறித்து விசாரணை

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான பஷீர் சேகுதாவூத் நேற்று கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் வாக்குமூலம் ஒன்றை அளித்தார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாம் தொடர்பாக 'மறைக்கப்பட்ட மர்மங்கள்' என்ற பெயரில் வெளியான நூல் தொடர்பாகவே
11 »»»»



## பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு ஜனாதிபதி பிரதமர் கௌரவம்

2016 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சை மற்றும் 05 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பான சித்திகளைப் பெற்ற மாணவர்களைப் பாராட்டி கௌரவித்து பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று (28) முற்பகல் ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில்
11 »»»»



## O/L முடிவுகள்
## நகர்ப்புற பாடசாலைகள் முதலிடங்களில் முன்னணி











■ பா.மலரம்பிகை

நேற்றைய தினம் வெளியான கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை யில், கொழும்பு விசாகா மகளிர் வித்தியாலய மாணவி அனுகி சமத்கா பெஸ்குவேல் அகில
11 »»»»

## போராட்டத்துக்கு தயாராகும் முசலி பிரதேச மக்கள்
09 »



## இந்த ஆண்டு இறுதிக்குள் 3 மாகாணங்களுக்கு தேர்தல்

■ பா.மலரம்பிகை

கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய ஆகிய மூன்று மாகாணங்களுக்குமான தேர்தல் இவ்வருட இறுதிக்குள் இடம்பெறும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

அதேநேரம், இத்தேர்தல் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான விசேட கூட்டமொன்று இன்று
11 »»»»

### நடராஜா ரவிராஜ் கொலை;
## விடுவிக்கப்பட்ட மூவரையும் தேடுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு



பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரான நடராஜா ரவிராஜ் கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டுள்ள மூவரையும் குற்றப்புலனாய்வுப் பிரிவின் ஊடாக தேடுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்ற இந்தக் கொலை தொடர்பில்
11 »»»»

## ஹம்பாந்தோட்டை துறைமுக கையளிப்பு அரசமைப்புக்கு முரணானது

### பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்



■ அ. அருண் பிரசாந்த்

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கும் செயற்பாடானது அரசமைப்புக்கு முரணானது என்று வெளிவிவகார முன்னாள் அமைச்சரும் பொது ஜன பெரமுன கட்சித் தலைவருமான ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.
11 »»»»

# வாழ்விடங்களை காடுகளாக்கும் வர்த்தமானியை ரத்து செய்ய முஸ்லிம் எம்.பிக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## உலமாக்கட்சி கோரிக்கை

கரிமலையூற்று பள்ளிவாயலை உடைத்து விட்டு அந்த இடத்தை இராணுவத்துக்கு உரிமையாக்கும் வர்த்தமானிக்கும், வடமாகாண அகதி முஸ்லிம்களின் பாரம்பரிய வாழ்விடங்களை காடு என அறிவிக்கும் வர்த்தமானிக்கு ஜனாதிபதி ஒப்பமிட்டுள்ளமையும் நல்லாட்சி அரசின் மிக உச்ச முஸ்லிம் விரோதப்போக்காகும் என உலமா கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இது பற்றி அக்கட்சித்தலைவர் கலாநிதி மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்ததாவது,

கடந்த மஹிந்த அரசில் நடந்த சில தவறுகளுக்காக மைத்ரி ரணில் அரசை கொண்டு வந்த முஸ்லிம்கள் இன்று மிக மோசமான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். கடந்த தேர்தலின் போது உலமா கட்சி மிகத்தெளிவாக முஸ்லிம்கள் மஹிந்தவுடன் பேசி அவரை ஆதரிப்பதே நல்லது என்று கூறியதுடன் அப்படித்தான் மைத்திரியை ஆதரிப்பதாயின் முஸ்லிம்கள் ஒன்றுபட்டு முஸ்லிம்களுக்காக மைத்திரியுடன் ஒப்பந்தம் செய்து ஆதரவளிக்கும்படி பொறுப்புள்ள கட்சி என்ற வகையில் சமூகத்துக்கு கூறினோம்.

மஹிந்தவின் ஆட்சியில் சில தவறுகள் நடந்த போது நாம் அதனை எதிர்த்து நின்றோம். ஆனால் தேர்தல் வந்த போது நல்லாட்சி கூட்டணி என்பது இனவாத ரணில், ஹெல உறுமய, முஸ்லிம்களுக்கு ஆதரவாக பேசாத மைத்ரி கூட்டணி என்பது மஹிந்தவை விட மிக மோசமானது என கூறினோம்.

எம்மை பொறுத்த வரை சுயநலனை சிந்திக்காமல் சமூகத்துக்கான எமது அரசியல் கருத்துக்கள் மற்றும் செயற்பாடுகள் மூலம் உலகில் வெற்றி கிடைக்காவிட்டாலும் மறுமையில் வெற்றி கிடைக்கும் என்ற உறுதியான எண்ணத்தில் செயற்படுபவர்கள் என்பதால் நாம் எச்சரித்தவை இன்று உண்மைகளாகிக்கொண்டிருக்கின்றன.

கரிமலைப்பள்ளி மஹிந்த அரசில் சேதமுற்றதால் அங்கு தொழுகை தடுக்கப்பட்ட போது அதற்கெதிராக உலமா கட்சி குரல் எழுப்பியதன் காரணமாக அந்தப்பள்ளியை உடைப்பது தவிர்க்கப்பட்டது. இப்போது அதனை முற்றாக உடைத்துதள்ளுவதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் அனுமதியளித்துள்ளனர்.

உண்மையில் மஹிந்த ராஜபக்ஷ சிறந்த ஜனநாயக அரசியல்வாதியாவார். மக்கள் உலமா கட்சிக்கு அதிகாரம் தந்திருந்தால் நிச்சயம் எம்மால் மஹிந்தவிடமிருந்து பல உரிமைகளை பெற்றுத்தந்திருக்க முடியும். மக்கள் ஆதரவு எமக்கு இல்லாத நிலையிலும் நாம் சில உரிமைகளை மஹிந்த மூலம் பெற்றுத்தந்துள்ளோம். அத்தகைய தலைவரை முஸ்லிம் சமூகம் கண் மூடித்தனமாக ஒதுக்கி விட்டு இன்று தலையில் கை வைத்து ஒப்பாரி வைக்கிறது.

அன்று நாம் மஹிந்த பற்றி பேசும்போது நீங்கள் யார் ? எம் பியா, மக்கள் பிரதிநிதியா என்றுதான் முட்டாள்தனமாக பலரும் எம்மை நோக்கி கேட்டார்களே தவிர எமது கருத்துக்களில் உண்மை இருக்கிறதா என ஆராயவில்லை.

ஆகவே நல்லாட்சி அரசின் மேற்படி முஸ்லிம் விரோத செயல்களை உலமா கட்சி வன்மையாக கண்டிப்பதுடன் கரிமலையூற்று பள்ளி மற்றும் வடமாகாண முஸ்லிம்களின் வாழ்விடங்களை காடுகளாக்கும் ஜனாதிபதியின் வர்த்தமாணி அறிவித்தல்களை அனைத்து முஸ்லிம் எம்பிமாரும் இணைந்து ரத்துச்செய்ய உடனடி முயற்சி எடுக்க வேண்டும்.

## காய்ச்சல் மூன்று நாள் தொடரின் வைத்தியரை நாடவும்

நாடெங்கும் ஒரு வகையான வைரஸ் காய்ச்சல் மக்கள் மத்தியில் பரவி வருவதால், காய்ச்சல் வந்து தொடர்ந்து மூன்று நாட்களுக்கு காணப்பட்டால் உடனடியாக அருகிலுள்ள வைத்தியர்களை நாடுமாறு சுகாதாரத் திணைக்கள விஷேட வைத்திய நிபுணர் நோயல் பெரேரா பொது மக்களிடம் வேண்டியுள்ளார்.

முஹம்மத் தாலூத், வெலம்பொட

## டெங்கு ஒழிப்பு

(பாஹிர் பாரூக் ரிதீகம நிருபர்)

குருநாகல் தல்கஸ்பிடிய பிரதேசத்தில் இன்று டெங்கு சோதனை நிகழ்வு இடம்பெறவுள்ளது. இராணுவம், சுகாதார அதிகாரிகள் மற்றும் ஏனைய அதிகாரிகளின் பங்களிப்புடன் வீடுகள், கடைகள், தோட்டங்கள் சோதனைக் குட்படுத்தப்படவுள்ளன.

முக்கியமாக நுளம்பு பெருகும் வண்ணம் சூழலை வைத்திருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்க விருப்பதாக சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

## ஜனாதிபதி விசாரணைப் பிரிவின் பணிப்பாளராக ரூபன் விக்ரமாரச்சி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஜனாதிபதி விசாரணைப் பிரிவுகள் பணிப்பாளராக நியமித்துள்ள ரூபன் விக்கிரமராச்சி அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் புதிய பொறுப்பினை ஏற்றுக்கொண்டார்.

இலங்கை மின்சார சபையின் விசாரணைப் பிரிவின் ஆரம்ப நிறுவனத் தலைவராக பணியாற்றிய விக்ரமாரச்சி, தனது முப்பத்து ஆறு வருட சேவைக்காலத்தில் முப்பத்து ஐந்து வருடங்கள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிலும் விசாரணைப் பிரிவிலும் தொடர்ச்சியாக எவ்வித குற்றச்சாட்டுக்களுமின்றி பணியாற்றிய அதிகாரியாவார். தான் ஓய்வு பெறும் வரை இலங்கை மின்சார சபையின் சேமலாப சங்கத்தின் செயலாளராக செயற்பட்ட விக்ரமாரச்சி, அப்பொறுப்பில் தொடர்ச்சியாக 27 வருடங்கள் சேவைசெய்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற மின்சார மோசடிகள் குறித்த பல்வேறு முக்கிய வழக்குகள் தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள விக்ரமாரச்சி, அவ்வழக்குகளின் வெற்றிக்காக பாடுபட்டுள்ளார். அவரது சேவைக் காலத்தில் மின்சார மோசடிகள் தொடர்பில் ரூபா 58 கோடிக்கும் மேற்பட்ட நட்டத்தொகையை வருமானமாக ஈட்டிக் கொள்ள முடிந்துள்ளது. விசாரணையின் மூலம் நான்கு கோடி ரூபாவை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை விக்ரமாரச்சி மேற்கொண்டிருந்தார். இது சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டமை தொடர்பாக இதுவரையில் அறவிடப்பட்ட அதிகூடிய நட்டத்தொகையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழு வருடங்களுக்கும் மேலாக இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராக பணியாற்றியுள்ள விக்ரமாரச்சி, களனிப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாவார். மேலும் அப்பல்கலைக் கழகத்தின் பழைய மாணவர் அமைப்பின் தேசிய அமைப்பாளருமாவார். திரு. விக்ரமாரச்சி பாதுகாப்பு அமைச்சின் அனுசரணையின் கீழ் உள்ள லங்கா லொஜிஸ்டிக் அன் டெக்னொலஜி நிறுவனத்தின் பணிப்பாளரும் ஆவார். மேலும் அவர் பெல்லன்வில எசல பெரஹர குழுவின் பொருளாளராகவும் கடமையாற்றிவருகிறார்.

## தௌஹீத் ஜமாஅத் ஹிப்ழ் மத்ரஸாவின் இரண்டாவது பட்டமளிப்பு விழா






(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

அகில இலங்கை தௌஹீத் ஜமாஅத்தின் பகுதி நேர ஹிப்ழ் மத்தரஸாவின் இரண்டாவது பட்டமளிப்பு விழாவும் குர்ஆன் மத்ரஸாவின் பரிசளிப்பு விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (26) மருதானை டவர் மண்டபத்தில் ஹிப்ழ் மத்ரஸாவின் அதிபர் அல்-ஹாபிழ் எம். ரிப்ராஸ் ராஸிக் (அல்-அஸ்ஹரி) மற்றும் குர்ஆன் மத்ரஸாவின் அதிபர் உஸ்தாத் மஸ்வூத் பாட்சா முஅல்லிம் ஆகியோரின் வழிநடத்தலில் அமைப்பின் தலைவர் அஷ்ஷேக் சி.எம். அபூஸாலிஹ் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக யு.ரி.ஜேயின் தலைவர் அஷ்ஷேக் எம்.எஸ்.அப்துல் வதூத் ஜிப்ரி, அஷ்ஷேக் முபாறக் மதனி அஷ்ஷேக் தாருத் தக்வாவின் பணிப்பாளர் அல்-ஹாரி யுஸ்ரி சுபைர், பயிற்சிக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷேக் எஸ்.எல்.நௌபர் (கபூரி), அஷ்ஷேக் நஜ்முல் ஹுஸைன், எகிப்து நாட்டின் காரி அஷ்ஷேய்க் மஃமூத் அல்யான் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது அமைப்பின் செயலாளர் மௌலவி பாயிஸ் பாகவி வரவேற்புரையையும், சிறப்புரையை காலி இப்னு அப்பாஸ் அறபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷேக் டபிள்யு. தீனுல் ஹஸன் அவர்களும் நன்றியுரையை மௌலவி யூனுஸ் தப்ரீசும் வழங்கினர். நிகழ்வில் அல் குர்ஆனை பூரணமாக மனனம் செய்த 10 பேர் பட்டமளிக்கப்பட்டு சான்றிதழ்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் பணப்பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பாத்திமா ஹஸ்னா நௌஸர், ஷபியா இம்தியாஸ், பாத்திமா சுக்ரா இல்யாஸ், ஷப்ராஸ் நிஸாம், பாத்திமா ஸஹ்றா நளீப், ராஷிட் றிஸ்வான், பாத்திமா முஸம்மில், பாத்திமா ஸப்ரா பர்ஹான், பாஸில் பைஸர், உமைர் இஸாக் ஆகியோர் பட்டமளிக்கப்பட்டதுடன் சிறந்த மாணவிகளாக தெரிவு செய்யப்பட்ட பாத்திமா அஸ்கா ஆப்டீனும், ஸல்மா அஸாட் ஆகியோரும் அதிதிகளால் விஷேட நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

## முகவரிகளின் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு

(துறைநீலாவணை தாஸன்)

அலிஷ் ஊடகவலயமைப்பின் ஏழாவது அகவையை முன்னிட்டு முகநூல் முகவரிகளின் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு, மருதமுனை கலாசார மண்டபத்தில் ஜெஸ்மி. எம்.மூஸா தலைமையில் இடம்பெறும்.

கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் செ.யோகராஜா இலக்கிய அதிதியாகவும் ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.காதர் இப்றாகிம் முன்னிலை அதிதியாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஜெஸ்மி எம்.மூஸாவினால் தொகுக்கப்பட்ட முகநூல் வரிகளின் கவிதைத் தொகுப்பினை அலிஷ் ஊடகவலையமைப்பின் சிரேஸ்ட ஆலோசகர் சறோதாஜுதீன்,இலக்கிய அதிதியிடமிருந்து முதற்பிரதியினைப் பெறுவார். மருதமுனை முகநூலின் கவிதைப் பதிவுகளிலிருந்து தேர்ந்தேடுக்கப்பட்ட முகநூல் முகவரிகள் குறித்து, பன்முக ஆளுமையாளர் உமாவரத ராஜனும் கலாநிதி சத்தார் எம்.பிர்தௌசும் திறனாயவுள்ளனர். இந்நிகழ்வுக்கான ஒலிக்குரலினை பிறை எப்.எம் கட்டுப்பாட்டாளர் பஷீர் அப்துல் கையூம் தொகுத்து வழங்கவுள்ளார்.



சர்வதே பெண்கள் தினத்தை முன்னிட்டு மடவள மடிகே திவிநெகும சமூக மூலதன அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் இனிப்புணவுப்போட்டியில் கலந்துகொண்டவர்களுக்குப் பரிசு வழங்கும் போது திவிநெகும (சமுர்தி) அபிவிருத்தி பணிப்பாளர் திலக் பண்டா உரை நிகழ்த்துவதையும், சமாஜ அபிவிருத்தி அதிகாரின் நலின் சமரசிங்க திவிநெகும வங்கி முகாமையாளர் திருமதி லலிதா ரத்னுபால அபிவிருத்தி அதிகாரி எஸ்.எச்.எம். ஹரீஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர். ( மடவள பஸார் ஏ.எஸ்.ஏ. ருஷ்தி)

## கெகிராவ முஸ்லிம் ம.வி. இல் இரு மாணவர்களுக்கு 9 ஏ

(கலாவெவ நிருபர் )

நேற்று வெளியான கல்விப் பொதுத்தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி கெகிராவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் இரு மாணவர்கள் 9 ஏ சித்தியினை பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் அதிபர் ஏ.சுலைகா பேகம் தெரிவித்தார்.

இதன்படி ஆர்.எம்.இஹ்சான்,எம். என்.எப்.சஹ்ரா ஆகிய மாணவர்கள் 9 ஏ சித்தியினையும் ஆர் .உபைத்துர் ரஹ்மான் 8 ஏ,1சீ சித்தியினையும் பெற்றுள்ளதுடன் பாடசாலையிலிருந்து பரீட்சைக்கு தோற்றிய 31 மாணவர்களில் 17 மாணவர்கள் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பிரிவுகளில் கல்வி கற்க தகுதி பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

| சுபஹ் | ழுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|
| 4.56 | 12.17 | 3.25 | 6.21 | 7.30 |

தொழுகை நேரங்கள் 29.03.2017

கிழக்குமாகாணம் 6 நிமிடங்கள் கழித்து கணிப்பிடவும்

## தம்புள்ளையில் அடாவடித்தனம் நடத்தும் இனவாத சதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குக!

### அஸ்வர் கோரிக்கை



(எம்.எஸ்.எம். ஸாகிர்)

இன்று தம்புள்ளையில் எழுந்துள்ள மிகவும் பயங்கரமான சூழ்நிலையையிட்டு அரசாங்கத்திலுள்ள முஸ்லிம் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் உடனடி நடவடிக்கை எடுத்து முஸ்லிம்களுடைய பள்ளிவாசல்களுக்கும் இருப்பிடங்களுக்கும் வாழ்வாதாரத்துக்கும் அச்சுறுத்துகின்ற இன விரோத சக்திகளுக்கெதிராக அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் வற்புறுத்த வேண்டும்.

இப்படி அரசாங்கம் செய்யாத பட்சத்தில் அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர்களும் உடனடியாக தங்களது பதவிகளை விட்டு வெளியேற வேண்டும் என முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபர் ஏ.எச்.எம். அஸ்வர் மேற்கண்டவாறு அறிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அநியாயமாக பொய் வதந்திகளைப் பரப்பி முன்னைய மஹிந்த ராஜபக்ஷவினுடைய அரசாங்கத்தை பதவியிலிருந்து இறக்குவதற்கு அரசிலுள்ள அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் சென்ற பொதுத் தேர்தலின் போது மூட்டை கட்டிக் கொண்டு பிரசாரம் செய்தனர். முஸ்லிம்களும் அவர்கள் சொன்ன வார்த்தைகளை நம்பி நல்லாட்சி எனும் இந்தப் பொல்லாட்சிக்கு வாக்களித்தனர். இது உண்மையிலே முஸ்லிம்களுக்கு எதிரான பொல்லாட்சியாக உருமாறி இருப்பதையிட்டு முழு நாட்டிலுள்ள முஸ்லிம்கள் இப்போது கொதித்தெழுந்துள்ளனர். அன்று நோன்பு பிடித்து, தஹஜ்ஜத் தொழுது, குனூத் ஓதி, மைத்திரி - ரணில் ஆட்சியை பதவிக்குக் கொண்டுவர, தியாக உணர்வுடன் முயற்சிகளை எடுத்த இவர்கள், இன்று முஸ்லிம்களின் மத்தியில் குற்றக் கூண்டில் ஏறி நிற்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி இருக்கின்றனர். எனவே அன்று மஹிந்த அரசில் நடைபெறாத பயங்கரமான செயற்பாடுகள் இந்த அரசின் கீழ் நடந்து கொண்டிருப்பது குறித்து இன்னும் கண்மூடிக் கொண்டு முஸ்லிம்கள் வாளாவிருக்க முடியாது என்பதை மிகவும் அழுத்தமாக நாங்கள் குறிப்பிட வேண்டும்.

இந்த அரசாங்கத்தின் கீழ் இனவாதம் எவ்வளவு தூரத்துக்கு மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளது என்பது இன்று தம்புள்ளையில் நடைபெறுகின்ற முஸ்லிம்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் மூலம் நன்றாக வெட்டவெளிச்சமாகத் தெரிகின்றன. எனவே இந்த அரசாங்கம் உண்மையாக நேர்மையான அரசாங்கம் என்றால், முஸ்லிம்களும் இந்த நாட்டு பிரஜைகள் என்ற உண்மையை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களேயானால் இந்த அடாவடித்தனத்தை நிறுத்துவதற்கு அரசாங்கத்தினால் நிச்சயமாக முடியும் என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர். எனவே இது ஏனைய இடங்களுக்கும் பரவாமல், ஏனைய இடங்களில் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டு இருக்கின்ற உயிர் ஆபத்து எச்சரிக்கைகளையும் கருத்திற் கொண்டு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் அப்படிச் செய்ய வேண்டுமென முஸ்லிம் அமைச்சர்களும், அரசாங்கத்திலுள்ள அரச பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட்டாக ஒன்று சேர்ந்து அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். அவர்கள் தங்கள் மத்தியில் இருக்கின்ற கட்சி உட்பூசல்களை, பிளவுகளை, சச்சரவுகளை மறந்து புனித பள்ளிவாசல்களைக் காப்பதற்கும், முஸ்லிம்களுடைய உயிர் உடைமைகளைக் காப்பதற்கும் முன் வர வேண்டிய தருணம் இது என்பதையும் நாங்கள் அடித்துக் கூறுகின்றோம் என்றும் முன்னாள் அமைச்சர் அஸ்வர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.





பாணந்துறை, பள்ளிமுல்லை வை.எம்.எம்.ஏ. பாலர் பாடசாலையின் சந்தை நிகழ்ச்சியின் போது, பிரதம அதிதி, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை உபதலைவர் எம். வஹாப் நாடாவை வெட்டி சந்தையை திறந்து வைப்பதையும் சிறப்பதிதி இளம் அரசியல்வாதி நௌஷாத் மன்சூர் மற்றும் கௌரவ அதிதி ஏ.எல்.எம். அஸ்வர் ஆகியோரையும் சந்தையின் சில காட்சிகளையும் படங்களில் காணலாம். (படம் - சபீதார்)

## விமலை பார்க்க வருவோரை கட்டுப்படுத்த நடவடிக்கை



வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் சுகயீனம் காரணமாக சிகிச்சை பெற்று வரும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவை சுகம் விசாரிப்பதற்கு வருகைதருவோரை குறைப்பதற்கு சிறைச்சாலை திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் சிறைச்சாலை திணைக்கள ஆணையாளர் ஜெனரல் நிஷான் தனசிங்க தெரிவித்துள்ளதாவது,

நேற்று முன்தினம் சிறைச்சாலை வைத்தியசாலைக்கு அதிகளவானோர் வருகை தந்தமையாலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அந்தவகையில், குடும்ப உறுப்பினர் 3 பேரளவில் காலை 8 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு வருகைத்தர முடியும்.

எவ்வாறாயினும், பாராளுமன்ற சிறப்புரிமைக்கு அமைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வைத்தியசாலைக்கு வருகைதர முடியும் என்றும், இதனடிப்படையில், காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரையான காலப்பகுதியில் வரமுடியும் என்றும் சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் ஜெனரால் நிஷான் தனசிங்க மேலும் குறிப்பிட்டார்.

# குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் யுத்தகாலத்தின் போது இடம்பெற்றன

## கோத்தாபய தெரிவிப்பு



யுத்த காலத்தின் போது, சில குற்றச் செயல்களும், மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றன என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

வெளிநாட்டு ஊடகவியலாளர் சங்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களை நேற்றுமுன்தினம் இரவு கோல்பேஸ் விடுதியில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது தொடர்ந்து தெரிவித்த அவர்,

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை.

அரசியலில் நுழைவதற்கு விரும்பாவிடினும், நாட்டுக்குச் சேவையாற்றும் வாய்ப்பை நிராகரிக்கமாட்டேன். நான் ஒரு நல்ல அரசியல்வாதியாக இருப்பேன் என்பது நிச்சயமில்லை. ஆனால், அரசியலை நான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி எப்போதும் கூறுவார்.

எனது கொள்கைக்கு இணக்கமான ஒரு தலைவரை ஆதரிக்கத் தயாராக இருக்கிறேன்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அரசியல் பிரவேசத்தை ஒரு உதாரணமாக எடுத்து, அவரது முறைமைகளை ஆராய்ந்து வருகிறேன். யுத்தக்குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு புதிய விசாரணைப் பொறிமுறைகள் தேவையில்லை. தற்போதுள்ள நீதிப் பொறிமுறைகளே போதுமானது.

யுத்த காலத்தின் போது தனித்தனியான சில குற்றவியல் சம்பவங்கள் இடம்பெற்றன என்பதை நான் நிராகரிக்கவில்லை. ஆனால், முழு இராணுவத்தையும் குற்றம்சாட்டுவது நியாயமானதல்ல.

எனது கட்டுப்பாட்டில் இருந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த குழுவொன்று ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்த குற்றச்சாட்டு தவறானது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு அவ்வாறு செயற்பட்டிருந்தால், அப்போதைய இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவே அதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு தனது கட்டுப்பாட்டில் இருக்கவில்லை என்று அவரால் எப்படிக் கூற முடியும்? இது ஒரு நகைச் சுவை என அவர் தெரிவித்தார்.

## நீதிமன்றத்தில் சத்தமிட்டவர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை நீதிமன்றத்திற்கு டெங்கு பரவும் விதத்தில் சுற்றுப்புறச் சூழலை வைத்திருந்த குற்றச்சாட்டிற்காக வழக்கு விசாரணைக்காக வருகை தந்திருந்த போது நீதிமன்றத்திற்குள் சத்தமிட்ட குற்றச்சாட்டின் பேரில் நேற்று இளைஞனொருவரை கைது செய்துள்ளதாக நீதிமன்ற பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை.மஹாமாயபுர பகுதியைச் சேர்ந்த எம்.ஆர்.முகம்மட்ஷான் (30) என்பவர் ஆவார்.

கைதுசெய்யப்பட்டவரின் தந்தைக்கு டெங்கு பரவும் விதத்தில் சுற்றுப்புரச்சூழலை அசுத்தமாக வைத்திருந்த குற்றச்சாட்டிற்காக நீதிமன்றத்திற்கு தண்டப்பணம் செலுத்துவதற்கு வருகை தந்திருந்த மகனான இவர் திறந்த நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்த போது சத்தமிட்டதாக நீதிமன்ற பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு இவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்டவரை திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் நேற்றைய தினமே ஆஜர்படுத்திய போது 1500 ரூபாய் தண்டம் செலுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

## 2017 "யொவுன்புர" இன்று திருமலையில்

2017 "யொவுன்புர" இளைஞர் முகாம் நிகழ்வு திருகோணமலை மெக்ஹெயிஸர் மைதானத்தில் இன்றையதினம் ஆரம்பமாகின்றது.

"எதிர்காலத்தை ஆரம்பிப்போம்" என்பதே இம்முறை இதன் தொனிப்பொருளாகும். குறித்த அங்குரார்ப்பண நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளதோடு, இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேராவும் பங்கேற்கவுள்ளார்.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும், இலங்கை இளைஞர் கழக சம்மேளனமும் இதனை ஒழுங்கு செய்துள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள இறுதிநாள் நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் அதிதிகளாக கலந்து கொள்வார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இளைஞர் விவகார அமைச்சராக பணியாற்றிய காலப்பகுதியில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 27 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் கடந்த ஆண்டில் யொவுன்புர நிகழ்ச்சி சீகிரியவில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னற்றத்திற்கான முதலீட்டு செயற்றிட்டத்தின் கீழ் கொழும்பு நீர்வழங்கல் திட்டத்தை முன்னேற்றுவது தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றது. இதன்போது 'நீரை பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் (www.savewater.lk) அமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, மனோகணேசன், பிரதி அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே மற்றும் நீர்வழங்கல் திட்ட வெளிநாட்டு அதிகாரிகள் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (ஷபீக் ஹுஸைன்)

## தேங்காயின் விலை 80 ரூபாவாக அதிகரிப்பு



பண்டிகை காலம் நெருங்கி வரும் நிலையில் கடந்த நாட்களாக தேங்காயின் விலை அதிகரக்கப்பட்டுள்ளதாக சந்தை ஆய்வு மையம் தெரிவித்தது.

அந்தவகையில், சாதாரணமாக தேங்காய் ஒன்றின் விலை 80 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

இது தொடர்பில், மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளதாவது, தேங்காய், தேங்காய் எண்ணெய், அரிசி, உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் காய்கறி உள்ளிட்ட உணவு பொருட்களின் விலை அதிகரிப்பு பெப்ரவரி மாதத்தில் பணவீக்கத்தின் காரணமாக அதிகரிக்கும்.

இதேநேரம், பெப்ரவரி மாதத்தில் பணவீக்கமானது நூற்றுக்கு 8.02 வீதமாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தலைப்பிறை பார்க்கவும்

ஹிஜ்ரி 1438 புனித ரஜப் மாதத்தின் தலைப்பிறை பற்றி தீர்மானிக்கும் நாள் இன்று 29 ஆம் திகதி புதன்கிழமை மாலை வியாழன் இரவாகும். எனவே இன்றைய தினம் மாலை மஃரிப் தொழுகை நேரமாகிய 06.21 மணி முதல் புனித ரஜப் மாதத்தின் தலைப்பிறையைப் பார்க்குமாறும், பிறையைக் கண்டவர்கள் தகுந்த ஆதாரத்துடன் நேரில் அல்லது கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களில் ஏதாவது ஒன்றின் மூலம் அறியத்தருமாறும் சகல முஸ்லிம்களையும் கொழும்பு பெரிய பள்ளிவாசல் கேட்டுக் கொள்கிறது.

மேற்படி புனித ரஜப் மாதத்தின் தலைபிறையைத் தீர்மானிப்பதற்காக கொழும்பு பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் இன்று 29 புதன் மாலை மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெறவுள்ள மாநாட்டில், கொழும்பு பெரியபள்ளிவாசல்,



அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா பிறைக்குழுக்களின் உறுப்பினர்கள், முஸ்லிம் சமய கலாசார திணைக்களப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே, தயவுசெய்து இத்தகவலை இன்று 29ஆம் திகதி மஃரிப் தொழுகையின் பின்னர் ஜமாஅத்தாருக்கு அறிவிக்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சகல பள்ளிவாசல் நிர்வாகிகளையும் தயவுடன் கொழும்பு பெரிய பள்ளிவாசல் வேண்டிக் கொள்கிறது.

தொலைபேசி இலக்கங்கள் - 011 - 2451245, 011 - 2432110, 077 - 7316415, பெக்ஸ் - 011 - 2390783

## நாச்சியாதீவு மக்களின் அச்சத்தைப் போக்கவும்

### பிரதிப்பொலிஸ்மா அதிபரிடம் றிஷாத் கோரிக்கை



அனுராதபுர நாச்சியாதீவில் புத்தர் சிலை ஒன்றை அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளினால் அந்தப்பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் பதற்றத்தை தணித்து பாதுகாப்பைப்பலப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் றிஷாத்பதியுதீன், அந்தப்பகுதிக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மாஅதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்துவரும் அந்தக்கிராமத்தில் புத்தர் சிலை ஒன்றை அமைப்பதன் மூலம் இன ஐக்கியத்துக்குபாதமாக அமையுமென தெரிவித்துள்ள அமைச்சர், அதுவும் அங்குள்ள பழைமை வாய்ந்த பள்ளிவாசல் ஒன்றின் அருகில் இவ்வாறான முயற்சியொன்றை மேற்கொள்ள எடுக்கும் நடவடிக்கையை நிறுத்துமாறு அவர் கோரியுள்ளார்.

புத்தர் சிலையை அமைப்பதற்கான முன்னேற்பாடாக கடும்போக்காளர்கள் இன்று (29) பாதயாத்திரை ஒன்றை ஏற்பாடு செய்துள்ளதால் அந்தக்கிராமமக்கள் அச்சத்தில் இருப்பதாகவும் எனவே பொலிஸார் பாதுகாப்பைப்பலப்படுத்தும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இந்த முயற்சிகள் குறித்து நாச்சியாதீவு அமைப்புக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளன.



அண்மையில் மலேசியாவுக்கு விஜயம் செய்திருந்த கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் மலேசிய சுகாதார அமைச்சர் சுப்ரமணியத்தை சந்தித்து அரசியல் பொருளாதார விடயங்கள் பற்றி உரையாடினார். சந்திப்பின் பின் இலங்கை உயர்ஸ்தானிகர் இராஜாங்க அமைச்சருக்கு பரிசு வழங்குவதனை படத்தில் காணலாம். திருமதி பெரோஸா முஸம்மிலும் படத்தில் காணப்படுகின்றார்.

## அரச நாடக விழா;

## மானா மக்கீனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது




(அஷ்ரப் ஏ சமத்)

மானா மக்கீனுக்கு அரச நாடக விழாவின்போது வாழ்நாள் சாதனையாளர் விருது நேற்று (28) வழங்கப்பட்டது. உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி கலாசார அமைச்சின் கலாசாரத் திணைக்களத்தினால் இவ் ஆண்டின் அரச நாடக விழா நேற்று தாமரைதடாக உள்ளக அரங்கில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதியமைச்சர் பாலித்த தேவப்பெரும பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இந் நிகழ்வின் போது இலங்கை நடாகத் துறையில் மேடையிலும், வானொலியிலும் பத்திரிகைத் துறையிலும் 25க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவருமான கொழும்பைச் சேர்ந்த மானா மக்கீனுக்கு நாடகக் கீர்த்தி விருது வழங்கப்பட்டது.

வாழ்நாளில் ஒருமுறை மட்டும் வழங்கப்படும் விருதினை சிங்கள மொழி மூலம் சிங்கள நாடகக் கலைஞர் நாமல் வீரமுனிவுக்கும் தமிழ் மொழி மூலமான விருது மானா மக்கீனுக்கும் வழங்கபட்டது. இந்நிகழ்வில் கலாசார அமைச்சின் பணிப்பாளர், நாடகக் கலைஞர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் இளம் கலைஞர்களான எம். நவநீதன் மெஜிக் பொக்ஸ் குரு நாடகக் கலைஞர் எம்.இந்திருஜா ஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

## எச்1என்1 வைரசால் அச்சம் வேண்டாம்

இன்புளுவன்சா எச்1என்1 வைரசால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் அந்தநோய் குறித்து வீணாக அச்சமடைய தேவையில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்தது.

நாட்டின் சில பிரதேசங்களில் எச்1என்1 வைரசால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாகவும், ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மற்றும் பெப்ரவரி மாதங்களிலும், மே முதல் ஜூலை மாதங்களிலும் அந்த நோய் பரவுவதாகவும் அமைச்சு தெரிவித்தது.

அதன்படி சுகாதார அமைச்சின் ஆலோசனைப்படி நாட்டின் பல பிரதேசங்களில் எச்1என்1 வைரஸ் சம்பந்தமாக மக்களை தெளிவூட்டுவதற்காக வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வேலைத்திட்டங்களை விரைவாக ஆரம்பிக்குமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஜயசுந்தர பண்டாரவிற்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு கூறியது.

## ஐக்கிய முஸ்லிம் அமைப்பு தலைவரின் பாரியார் காலமானார்

கம்பஹா மாவட்ட ஐக்கிய முஸ்லிம் அமைப்பின் தலைவரான திஹாரிய எம்.ரி.எம்.முனாஸின் பாரியார் பாத்திரமா நிபாஹிரா நேற்று காலமானார்.

இவர் நான்கு பிள்ளைகளின் தாயாராவார்.

ஜனாஸா நல்லடக்கம் இன்று காலை 9 மணிக்கு திஹாரியில் நடைபெறும்.

## ஐ.தே.க.செயற்குழு 5 ஆம் திகதி கூடுகிறது

ஐக்கிய தேசியக் கட்சியில் மூன்று புதிய உப தலைவர் பதவிகளை உருவாக்குவது பற்றி எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சியின் செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

அமைச்சர்களான மங்கள சமரவீர, ரஞ்சித் மத்தும பண்டார, சரத் பொன்சேகா ஆகியோருக்கு கட்சியில் பிரதித் தலைவர் பதவிகள் வழங்கப்படவுள்ளதாக ஐ.தே.க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கட்சித் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள செயற்குழுக் கூட்டத்தில் மே தினம் கொண்டாடப்படுவது பற்றியும் ஆராயப்படும் என கட்சியின் செயலாளர் அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

NAVAMANI DAILY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
29TH MARCH 2017 - WEDNESDAY

# மாணவர்கள் ஒழுக்கத்தில் பெற்றார் முன் உள்ள பொறுப்பு

இந்நாட்டு மாணவர்கள் பரீட்சைகளில் திறமையாக சித்திபெற்றாலும் அவர்களது ஒழுக்கம் சீரழிந்திருப்பது பற்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரத்தினபுரி பர்கியூஸன் உயர்மகளிர் கல்லூரி நூற்றாண்டு விழாவில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகி, நாடளாவிய ரீதியில் பெருந்தொகையாக மாணவர்கள் சிறப்பான சித்திகளை பெற்றுள்ள செய்திகள் வெளியாகும் நிலையில் மாணவர்களது ஒழுக்கம் நாளுக்கு நாள் சீர்குலைந்து வருவது பற்றி பேச வேண்டியுள்ளது.

மாணவர்களது ஒழுக்கம் குறித்த பிரச்சினை இருப்பதனால் பெற்றார்களும், ஆசிரியர்களும் ஆண் பிள்ளை, பெண் பிள்ளை என்று பாராது பிள்ளைகளது பாதுகாப்பு மற்றும் ஒழுக்கம் பற்றி கூடுதல் கவனம் எடுக்க வேண்டும் என ஜனாதிபதி இங்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வார இறுதி பத்திரிகை ஒன்றில் மாணவர்களது ஒழுக்கம் தொடர்பாக எழுதப்பட்டிருந்த ஆசிரியர் தலையங்கம் பற்றி குறிப்பிட்டிருந்த ஜனாதிபதி, குறிப்பிட்ட தலையங்கத்தை இரு முறை வாசித்ததாகவும், அண்மைக் காலமாக மிகப் பாரதூரமாக மாறிவரும் மாணவர்களது ஒழுக்கப் பிரச்சினை பற்றி பெற்றாரின் அவதானத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

மிஹிந்தலை பாடசாலையொன்றில் 11ஆம் ஆண்டில் படிக்கும் மாணவர் ஒருவர் தனது பிறந்த நாளை பாடசாலை விளையாட்டு மைதானத்தில் சாராயப் போத்தலை உடைத்துக் கொண்டாடிய சம்பவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி நடைபெறும் இக்காலகட்டத்தில் தலைநகரில் நடைபெறும் மோட்டார் பவனிகளில் மாணவர்கள் குடித்து, கும்மாளமடித்து திரிவதனையும் நாம் கண்டு வருகிறோம். கொழும்பிலுள்ள மகளிர் பாடசாலை ஒன்றுக்குள் அத்துமீறி பிரவேசித்து அட்டகாசம் புரிந்தமையையும் எம்மால் காண முடிந்தது.

ஜனாதிபதி கூறியிருப்பது போன்று மாணவர்கள் மத்தியிலே ஒழுக்கம் குன்றியிருப்பது பெற்றாருக்கும், ஆசிரியர்களுக்கும் மட்டுமன்றி முழு நாட்டிற்குமே சவாலாக மாறி வருகிறது.

மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம் குன்றுவதற்கு சில நேரங்களில் பெற்றார்களும் காரணமாக இருந்து வருகிறார்கள். மாணவர்களது செயற்பாடுகளை கண்காணிக்க தவறுவதனால் மாணவர்கள் தாம் நினைத்த போக்கில் நடக்க முற்படுகின்றனர்.

அண்மையில் கொழும்பின் புறநகரில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிபரை விரட்டியடிப்பதற்காக பெற்றோர், மாணவர்களைப் பயன்படுத்தியதனை நாம் ஊடகங்களில் கண்டோம். குறிப்பிட்ட அதிபருக்கு முட்டை கூட எறியப்பட்டது. அதிபர் தேவையில்லை என்றால் அதனைத் தெரிவிப்பதற்கு மாற்று வழிகள் இருக்கும்போது மாணவர்களை இதுபோன்ற செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவது ஒழுக்கச் சீர்கேடுகளை ஏற்படுத்தாதா?

பெற்றாரும் மாணவர்களும் ஒன்றுசேர்ந்து இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும்போது இந்த மாணவர்கள் மத்தியிலே ஒழுக்கத்தை கட்டியெழுப்புவது எவ்வாறு? இன்று நவீன தொழில்நுட்ப வசதிகள் மாணவர்களது ஒழுக்கத்திற்கு சவாலாகிறது. விசேடமாக ஸ்மார்ட் போன் பயன்பாடு மாணவர்களை தவறான வழியில் இட்டுச் செல்கிறது.

ஸ்மார்ட் போன் மூலம் மாணவர்கள் ஆபாசப் படங்களை பதிவிறக்கம் செய்து பார்க்கிறார்கள். ஆண் – பெண் என்ற வேறுபாடின்றி இது நடக்கின்றது. பாரதூரத்தை உணராது பெற்றார்கள் தம் பிள்ளைகளுக்கு போன்களை வாங்கிக் கொடுக்கிறார்கள். இதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்ட பின்பே யோசிக்கிறார்கள். படிக்கின்ற வயதில் போன் பாவனையில் கட்டுப்பாடு இருப்பது அவசியமாகும். இது குறித்து பெற்றார் சிந்திக்க வேண்டும்.

ஜனாதிபதி கூறியிருப்பது போன்று பிள்ளைகளின் ஒழுக்கத்தில் பெற்றார்களுக்கு பாரிய பொறுப்பும் கடமையும் உள்ளது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

---

# விக்டர் ஐவன் தலைமையில் வேகமாக வளர்ந்து வரும் மறுமலர்ச்சி இயக்கம்



■ கஹட்டோவிட்ட முஹிடீன்

இலங்கைத் தாய் ஒரு யுத்தத்துக்கு முகம் கொடுத்து ஓய்வெடுத்துள்ளது. இந்த யுத்தத்தினால் பிரிந்த இலங்கைத் தாயின் உயிர்களையும், இழந்த சொத்துக்களையும் விட, மனித உள்ளங்களில் படிந்துள்ள படிவுகள், பயங்கரமானதாக நோக்கப்படுகின்றது.

சிறிய வெள்ளம் வந்து விட்டு சென்றால், வீட்டைத் துப்பரவு செய்வது போலவும், பாரிய அனர்த்தம் ஏற்பட்டால் வீட்டை மீள் கட்டுமானம் செய்வது போலவும், இந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மனித உள்ளங்கள், அந்த வீடுகளைப் போன்று பார்க்கப்பட வேண்டும் என சமூக ஆய்வாளரும் முன்னாள் ராவய பத்திரிகையின் ஆசிரியருமான விக்டர் ஐவன் குறிப்பிட்டார்.

விக்டர் ஐவன் தலைமையிலான மறுமலர்ச்சி இயக்கத்தின் அறிமுக நிகழ்வு கடந்த ஞாயிறு 26 ஆம் திகதி திஹாரியிலுள்ள, தனவந்தர் ஒருவரின் இல்லத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு அங்கு கூடியிருந்த பெயர் கூறி அழைக்கப்பட்ட சமூகத்தின் புத்திஜீவிகள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

விக்டர் ஐவனின் மறுமலர்ச்சி இயக்கப் பணிகள் நாடு முழுவதும் உள்ள சந்துபொந்துகளிலும், புத்திஜீவிகள் மத்தியிலான கலந்துரையாடல்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவர் ஏற்பாடு செய்யும் கலந்துரையாடல்களின் பின்னர் இம்மறுமலர்ச்சி இயக்கத்துக்கான அங்கத்தவர்கள் சுய விருப்பின் பேரில் இணைத்துக் கொள்ளப்பட்டு வருகின்றனர்.

போஸ்டர்கள், பெனர்கள், துண்டுப் பிரசுரங்கள் இன்றி, அவ்வப்பிரதேச பிரமுகர்கள் தொடர்பினால், ஏற்பாடு செய்யப்படும் கலந்துரையாடல்களாக இவரது மறுமலர்ச்சி இயக்கத்தின் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவரது மறுமலர்ச்சி இயக்கத்தில் நாடு முழுவதும் பத்து லட்சம் உறுப்பினர்களை உருவாக்குவது பிரதான இலக்காகும். இதனை நோக்காகக் கொண்டு முஸ்லிம் பிரதேசத்தில் நடாத்தப்பட்ட முக்கிய நிகழ்வே இந்த திஹாரிய கலந்துரையாடல் ஆகும்.

நாடுமுவதும் தேசிய சிந்தனையை சுமந்த பத்து லட்சம் பேரினால், மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதை இந்த அமைப்பு பிரதான நோக்காகக் கொண்டுள்ளது.

இந்த அமைப்பின் பாதையை தெளிவுபடுத்துகையில் அமைப்பின் ஸ்தாபக தலைவர் விக்டர் ஐவன் பகிர்ந்து கொண்ட கருத்துக்களை நவமணி வாசகர்களுடன் இவ்வாறு பகிர்ந்துகொள்கின்றோம்.

நாட்டு மக்களுக்கு நிம்மதியும், சந்தோஷமும் கொண்ட நல்வாழ்வை வழங்குவதற்கு சுதந்திரத்துக்குப் பின்னர் வந்த ஆணைக்குழுக்களும் அரசாங்கங்களும் தவறிவிட்டன. இரத்தம் சிந்தாமல் கிடைக்கப் பெற்ற சுதந்திரத்தை பெற்ற இந்நாட்டு மக்கள், சுதந்திரத்தின் பின்னரான வரலாற்று நெடுகிலும் இரத்தம் சிந்தப்பட்டு வருகின்றமை ஒரு கவலைக்கிடமான அம்சமாகும்.

இந்த நிலைமையை மாற்றுவதற்கு பாரிய பிரயத்தனங்கள் முன்னெடுக்க வேண்டும் என நாம் கருதுகின்றோம். மனித உள்ளங்களிலுள்ள சிந்தனை மாற்றப்பட வேண்டும். விதைக்கப்பட்டுள்ள குரோதங்கள் நீக்கப்படல் வேண்டும் எனவும் நாம் கருதுகின்றோம்.

இலங்கை நாடு தேசியத்தை உருவாக்காமலேயே சுதந்திரத்தை பெற்றது. சுதந்திரத்தைப் பெற்ற பின்னரும் தேசியம் என்ற எண்ணக்கரு உருவாக்கப்படவில்லை. இந்த நாட்டிலுள்ள சகல தரப்பினரும் ஒரே தேசிய இனம் என்று நோக்கும் நிலைமை உருவாகாமலேயே நாட்டின் நாட்களை அரசியல்வாதிகள் கடத்திச் சென்றனர்.

இதனால், சிறுபான்மை இனங்களையும், ஒடுக்கப்பட்ட சாதியினரையும், சிறுபான்மை மதங்களையும் சார்ந்த மக்கள் மத்தியில் நிலவிய அதிருப்தி, நம்பிக்கையீனங்களுக்கு தீர்வு கட்டப்படவில்லை. ஆட்சிபீடம் ஏறிய அரசாங்கங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் சிறுபான்மை இனங்களையும், சாதிக் குழுக்களையும் மதங்களையும் துன்பத்துக்கு ஆளாக்கின.

எனவே, வளர்ச்சியடைந்துவந்த அதிருப்தி சுதந்திரத்தின் ஆரம்பம் முதலேயே காலத்துக்குக் காலம் குழப்பங்களாக மாறி, இறுதியில் நீண்ட வன்முறையாகவும், மோதலாகவும் மாறின. இதனை நாம் கடந்த 30 வருட வரலாற்றில் கண்டோம் எனவும் முன்னாள் ராவய ஆசிரியர் குறிப்பிட்டார்.

மனித உள்ளங்களில் இன்று அச்சமும், நம்பிக்கையீனமும் ஏற்பட்டுள்ளன. ஒரு இனம் மற்றொரு இனத்தை சந்தேகத்துடன் நோக்கும் நிலை இன்னும் நீங்கவில்லை. யுத்தத்தின் பின்னரான இந்த நிலைகள் மாற்றப்பட்டாலேயே மனித உள்ளங்களில் சந்தோஷம் நிலைக்கும், நம்பிக்கை பிறக்கும்.

யுத்தம் முடிவுற்ற பின்னர் மக்கள் நம்பிக்கைப் பெருமூச்சு விட்டனர். விடிவு பிறந்தது என்ற கனவு வளர ஆரம்பித்தது. இருப்பினும், யுத்தத்துக்கு முடிவு கட்டிய மஹிந்த அரசு அதற்கு வழியமைக்கவில்லை. உருவாகிய சூழலில் சுயநல லாபம் தேட முயற்சித்தது. இதனால், ஊழல் அதிகமாகக் காரணமாகியது.

பின்னர், நாட்டில் எழுந்துவளர்ந்த ஊழல், மோசடிகளும், மஹிந்த யுக ஆட்சியாளர்கள் கொண்டிருந்த அசைக்க முடியாத இறுமாப்பும், அன்றிருந்த 30 வருட யுத்தத்தைப் போன்று நாட்டை அழிக்கும் ஒன்று என இந்நாட்டு மக்கள் உணர வெகுகாலம் எடுக்கவில்லை. இந்த மக்களின் உணர்வுகள் இந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக செயல்வடிவம் பெற்றன. புதிய அரசை ஆட்சி பீடம் ஏற்றி மக்களின் பலம் அநீதிக்கு முன்னால் எப்படி என்பதை நிரூபித்தனர்.

அடுத்து வந்த புதிய அரசின் கவர்ச்சியான வாக்குறுதிகளை மக்கள் எதிர்பார்த்திருந்தனர். தற்பொழுது, மூன்று வருடங்கள் கழியப் போகும் நிலையில் அந்த வாக்குறுதிகளுக்குரிய எந்தப் பெறுமானத்தையும் மக்கள் காணாத நிலையில் உள்ளனர்.

அரசியல் லாபத்துக்காக இனவாதம் பேசி இரு இனங்களை மோத வைக்கும் சிந்தனைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியாமல், இந்த நல்லாட்சி அரசாங்கத்தின் வழி முறைகள் மூக்குடைபட்டு நிற்கின்றது. யுத்தத்தை சந்தித்த தேசத்தின் சனங்களின் மனங்களை வெல்ல ஐ.நா.விடம் இன்னும் இரண்டு வருடங்களை அவகாசம் கேட்கும் வங்குரோத்து நிலைக்கு சென்றுள்ளதாக மக்கள் யோசிக்க தலைப்பட்டுள்ளனர்.

மக்கள் மனங்களில் அச்சம் நீங்குவதற்கு சட்டமும், அது சார்ந்த நிறுவனங்களின் செயற்பாடும் நம்பிக்கை ஊட்ட வேண்டும். பக்கச்சார்பு, அரசியல்வாதிகளின் செல்வாக்கு என்பவற்றுக்கு அப்பால் செயற்பட முன்வர வேண்டும் என்பது அந்த நம்பிக்கையின் அடிநாதம். இன்று கூட்டு எதிர்க்கட்சியினாலும் புத்தி ஜீவிகளினாலும் நாட்டின் உயர்ந்த நிறுவனம் விமர்சிக்கப்படும் நிலைக்கு சென்றுள்ளது.

அரசியல் யாப்பு மாற்றப்படும். ஆணைக்குழுக்களை அமைத்து நீதி நிலைநாட்டப்படும். இதனால், ஊழல் ஒழிக்கப்படும். அரச நிறுவனங்கள் சுத்திகரிக்கப்படும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. இருப்பினும், அது இன்று விடை காணாத வினாவாகவே மக்களின் உள்ளங்களில் காணப்படுகின்றது.

எனவே, நீண்ட காலமாக நிலவிய வன்முறை மோதல்கள் காரணமாக பௌத்த, இந்து, இஸ்லாமியர்களின் உள்ளங்களில் ஏற்பட்டுள்ள காயங்களைக் குணப்படுத்தி, சாதிபேதமற்ற, இனபேதமற்ற, மதபேதமற்ற, மூட நம்பிக்கைகளற்ற, விஞ்ஞான ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் நாட்டின் பன்மைத்துவக் கலாசாரத்தை ஏற்று நடந்துகொள்ளும், உண்மையை மதிக்கும் பத்து லட்சம் மக்களை அணிதிரட்ட முடிந்தால், இலங்கையில் நல்ல மறுமலர்ச்சியை உருவாக்கிக் கொள்ள முடியும் என இந்த மறுமலர்ச்சி இயக்கம் நம்புகின்றது.

அமைப்பு ரீதியாக பத்து லட்சம் பேரை அணிதிரட்ட முடிந்தால், ஏனைய மக்கள் மீது பாரிய செல்வாக்கைச் செலுத்த முடியும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

இதற்கான பயணம் கடினமானது என்பது மட்டுமல்ல, சிக்கலானதுமாகும். மனிதர்களின் வாழ்க்கையில் ஏற்படும் விழிப்புணர்வு, விஞ்ஞான அறிவு, கலை ஞானம், அரசியல் புரிந்துணர்வு ஆகிய அனைத்தும் ஒரு புதிய உத்வேகத்தை வழங்கும் என்பது எமது எதிர்பார்ப்பு. தேசிய நவீன அரசையும் நவீன சமூகத்தையும் உருவாக்குவதாயின் பல இலட்சக்கணக்கான மக்கள் மத்தியில் காத்திரமான முறையில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எமது மறுமலர்ச்சி இயக்கம், அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு போட்டியிடும் ஓர் அரசியல் இயக்கமாக மாறுவதை நோக்கமாக கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக பொது மக்களை வலையமைப்பாக அணிதிரட்டி, அவர்களுக்கு கல்வி ஊட்டி தேசத்தைக் கட்டியெழுப்புவதையே நோக்காகக் கொண்டுள்ளது.

ஊழல்களால் சிதைந்து போயுள்ள சமூகத்தையும், அரசாங்கத்தையும் மீள்உருவாக்கம் செய்து எமது பணியாகும். இதற்கு ஆற்றல் பெறும் வகையில், விவேகமான சமூக சூழலை உருவாக்கும் முயற்சியில் இந்த மறுமலர்ச்சி இயக்கம் ஈடுபட்டுள்ளதாகவும் ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் மேலும் தெளிவுபடுத்தினார்.

---

NAVAMANI DAILY
நவமணி

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# கிழக்கில் 18 மரணங்கள்: 4580 டெங்கு நோயாளிகள்

## கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் முருகானந்தம்



(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கிழக்கு மாகாணத்தில் இதுவரை டெங்கு நோயினால் 18 மரணங்கள் சம்பவித்துள்ளதோடு 4580 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கே. முருகானந்தம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் டெங்கு நோய் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

டெங்கு நோயினால் கிழக்கு மாகாணத்தின் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் 9 மரணங்களும் குறிஞ்சாக்கேணி பிரதேச சபைப் பிரிவுக்குள் 3 மரணங்களும், மூதூர், குச்சவெளி, திருகோணமலை பிரதேசங்களில் தலா ஒன்றுமாக 15 மரணங்கள் திருகோணமலை மாவட்டத்திலும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைப் பிரதேசம், காத்தான்குடி, செங்கலடி பிரதேங்களிலுமாக 3 மரணங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் சம்பவித்துள்ளன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைப் பிரதேசத்தில் மரணித்தவர் கொழும்பில் வசித்து அங்கிருந்து நோய்த் தொற்றினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவராவார்.

டெங்கு நோயாளிகளாக திருகோணமலை மாவட்டத்தில் 2680 பேர் மட்டக்கப்பு 960, கல்முனை சுகாதார சேவைகள் பிராந்தியத்தில் 827, அம்பாறை சுகாதார சேவைகள் பிராந்தியத்தில் 113 பேருமாக மொத்தம் 4580 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளார்கள்.

டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் வகையிலான விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக பொது மக்கள் தங்கது குடிமனைகளை தாங்களே துப்பரவு செய்யும்படியும் பணித்திருக்கின்றோம். அதற்கும் மேலதிகமாக கொழும்பிலிருந்தும் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் குறிப்பாக வட மாகாணத்தின் கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களிலிருந்து புகை விசிறும் கருவிகளையும் அதிகாரிகளையும் பெற்று கிண்ணியா, திருகோணமலை மற்றும் ஏனைய பகுதிகளிலும் புகை விசிறிக் கொண்டிருக்கிறோம்.

அத்தோடு உள்ளூராட்சிச் சபைகளின் உதவியோடு கிராமப்புறங்களில் இருக்கின்ற காணிகள், பாவிக்கப்படாத கிணறுகளையும் துப்பரவு செய்து கொண்டிருக்கிறோம்.

அதற்கு மேலதிகமான இன்புளுவன்சா, ஏ.எச்.என் 01 காணப்படும் இடங்களினை அடையாளம்கண்டு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதில் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக முக்கிய தேவையாக இருக்கிறது.

# கம்பஹா மாவட்ட வைத்தியசாலைகளில் பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனைக்கு தடை

( மினுவாங்கொடை நிருபர் )

கம்பஹா மாவட்ட சுகாதாரப் பணிமனையின் கீழ் இயங்கும் சகல வைத்தியசாலைகளிலும், பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் பாவனைகளை முற்று முழுதாகத் தடை செய்வதற்கு, ஆலோசனைகள் முன் வைக்கப் பட்டிருப்பதோடு, பல்வேறு தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டுள்ளன

இதேவேளை, வைத்தியசாலை களின் வளவுகளுக்குள் செவ்விள நீர் எடுத்துச் செல்ல, தடை விதிக்கப்படல் வேண்டும் என்றும், செவ்விள நீரை கண்ணாடி போத்தல்களில் மாத்திரம் ஊற்றி, எடுத்துச் செல்வதற்கான பணிப்புரை விடுக்கப்படல் வேண்டும் என்றும் ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் தற்போது பரவியுள்ள டெங்கு தொற்று தொடர்பிலான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திலேயே, இத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் உள்ள மா நகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை ஆகியவற்றின் அனைத்து பிரதேசங்களிலும் கழிவகற்றல் நடவடிக்கைகள் முறையாக ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும் என்றும், திண்மக் கழிவுகளை தரம் பிரித்து அகற்றும் செயற்பாடுகள் சீரான முறையில் கடைபிடிக்கப்படல் வேண்டும் என்றும் இதன்போது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், கம்பஹா மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தொடர்ச்சியான முறையில் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்றும், இம் மாவட்டத்தின் கம்பஹா, மீரிகம, நீர்கொழும்பு, மினுவாங்கொடை, வத்தளை ஆகிய பிரதேசங்களில் டெங்கு தொற்று தாக்கத்தின் அளவு அதிகரித்துக் காணப்படுவதால், இப் பிரதேசங்களிலுள்ள மக்கள் மத்தியில் கூடுதலான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும் என்றும், இதையும் மீறும் பட்சத்தில், கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என்றும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# கிண்ணியா முஸ்லிம் வித்தியாலயத்தில் இரு மாணவர்களுக்கு 9 ஏ

(கிண்ணியா, கியாஸ் ஷாபி)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் படி, கிண்ணியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்தில் இரு மாணவிகள் 9 பாடங்களிலும் ஏ தரத்தில் சித்தி பெற்றுள்ளனர். அப்துல் றவூப் மனால், அலாவுதீன் பாத்திமா சமா ஆகிய மாணவிகளே இந்த சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இது தவிர முகமட் வசீர் பாத்திமா சகீகா, முகமட் முலௌபர் பாத்திமா ஜெமீமா, நிசார்தீன் சரோத் ஜெஹறான் , சபியுல்லா பாத்திமா இல்மா , அவ்பர் சப்ரினா, முகமட் சுல்தான் சன்ஜிதா, அப்துல் வஹாப் பாத்திமா ஹனான் , முகமட் சதாத் சஹ்னாஸ் பானு, முகமட் கியாஸ் பாத்திமா றுக்லானா ஆகிய 9 மாணவிகள் 8 பாடங்களில் ஏ சித்திகளைப் பெற்று முன்னணியில் நிற்கின்றனர்.

இந்நிலையில், இப் பாடசாலையில் இருந்து 133 மாணவிகள் மேற்படி பரீட்சைக்குத் தோற்றியதில் 79 மாணவிகள் உயர்தரத்தில் கல்வி கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். இது 60சத வீதமாகும். கணித பாடத்தில் 60சதவீதம் சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாதாரணதரத்தில் நிந்தவூர் பாடசாலைகள் அதி சித்தி

(நிந்தவூர் குறூப் நிருபர்)

வெளியாகிய க.பொ.த (சா/த) பரீட்சை முடிவுகளின் படி இதுவரைக்கும் நிந்தவூரில் 09 மாணர்களுக்கு 09ஏ சித்தியும், 16 மாணவர்களுக்கு 8 ஏ, 1பி சித்தியும், 09 மாணவர்களுக்கு 8ஏ, 1சி சித்தியும், 22 மாணவர்களுக்கு 7ஏ, 2பி சித்தியும் அதிகூடிய திறமைச் சித்தியுடன் சித்தியடைந்துள்னர்.

இதுதவிர இம்முறை நிந்தவூரில் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 96% வீதமான மாணவர்கள் உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ளனர்.

அந்தவகையில் கிடைக்கப்பெற்ற பாடசாலை ரீதியிலான பரீட்சைப் பெறுபேறுகள் (அதி விஷேட சித்திகள்)1. நிந்தவூர் அல் அஷ்றக் தேசியப்பாடசாலையில் 9ஏ - 04 மாணவர்கள் 8ஏ 1பி - 5 மாணவர்கள் 8ஏ 1சி - 09 மாணவர்கள்7ஏ 1பி ,1சி- 03 மாணவர்கள் 2. நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலை 9ஏ - 03 மாணவர்கள் 8ஏ 01பி - 07 மாணவர்கள்

7ஏ, 02பி - 02 மாணவர்கள். நிந்தவூர் அல் மதீனா மகா வித்தியாலயத்தில் 8ஏ 01பி - 02 மாணவர்கள் 7ஏ, 01பி, 01சி - 02 மாணவர்கள் 5ஏ 3பி 01சி - 02 மாணவர்கள், இமாம் கஸ்ஸாலி வித்தியாலயத்தில் 9ஏ - 02 மாணவர்கள்7ஏ, 02பி - 03 மாணவர்கள், நிந்தவூர் மினா வித்தியாலயத்தில் 8ஏ , 1பி - 01 மாணவர் 7ஏ 2பி - 02 மாணவர்களும் அதிவிஷேட சித்திகளைப் பெற்றுள்ளதோடு ஏனைய மாணவர்களும் சிறப்புச் சித்திகளைப் பெற்று உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ளனர்.




மாத்தளை லோட் சர்வதேச பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற இஸ்லாமிய தின நிகழ்வின் போது சிறுவர்களின் கலை நிகழ்ச்சியையும் இவ்வைபவத்தில் கலந்துகொண்ட லோட் சர்வதேச கல்லூரி அதிபர் காமில் ஷரிப் தென்னக்கும்பர வை.எம்.எம்.ஏ. பொதுச் செயலாளர் ஏ.ஏ.எம்.நாகூர் பிச்சை கல்லூரி பணிப்பாளர் செய்ன் பஹ்மி வை.எம்.எம்.ஏ. ( சென்றல் தென்னக்கும்புர) எஸ்.எம்.நஸார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அக்குறணை கிறீன்வுட் சர்வதேச பாடசாலை அதிபர் இஸட் எம்.ஸமீக் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

( மடவள பஸார் ஏ.எஸ்.ஏ. ருஷ்தி)

**Government of the Democratic Socialist Republic of Sri Lanka**
**Ministry of City Planning and Water Supply**
**National Water Supply and Drainage Board**
**Jaffna Kilinochchi Water Supply and Sanitation Project**

# INVITATION FOR BIDS

| | |
|---|---|
| **Date** | 29/03/2017 |
| **Loan No and Title** | L 2710 – SRI – OCR, L 2711 – SRI (SF), L2719 – ADF & AFD Credit Facilities Agreement No: CLK 1003 – 01– J Jaffna Kilinochchi Water Supply and Sanitation Project |
| **Contract Number** | **PEIC/JKWSSP/Network/2014/02** |
| **Title** | Supplying and Laying of Water Distribution Networks in Palai, Kodikamam, Meesalai, Poonakary, Puttur, Nawatkuli, Karainagar, Pungudutivu, Vaddukkodai, Kattudai, Nallur zones, JMC Transmission pipeline & Construction of Office/stores, Quarters at Velanai, Kaddudai, Navatkuli, Pokkanai, Poonery and Karaveddy |

**Deadline for Submission of Bids** 17/05/2017

1. This Invitation for Bids follows the General 29.03.2017 This contract will be jointly financed by the Government of Sri Lanka and the Asian Development Bank. The eligibility rules and procedures of ADB will govern the bidding process.
2. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the Asian Development Bank (ADB) towards the cost of the Jaffna Kilinochchi Water Supply and Sanitation Project and intends apply part of the loan funds to cover eligible payments under the above mentioned Contract.
3. The Chairman, Standing Cabinet Appointed Procurement Committee, on behalf of the National Water Supply and Drainage Board, now invites sealed bids from eligible bidders through International Competitive Bidding, Single stage two envelope bidding procedure (ICB/1S-2E) for the above mentioned contract, the scope of which is briefly described below.

   * Supplying and Laying a total length of 235 km of uPVC and DI pipes in 11 Water Supply Distribution Networks
   * Supply and laying 5.5km of PE pipes for the Jaffna Municipal Council (JMC) pumping main
   * Construction of an OIC Office building (Approx. 240 sq.m) at Velanai,Kaddudai and Navatkuli
   * Construction of Caretaker Quarters building (Approx. 60 sq.m) at Pooneri and Karaveddy

4. To be eligible and qualified for contract award, the successful bidder shall have fulfilled the requirements as detailed in the bidding documents. Key requirements are:
   - The bidder shall have minimum average annual construction turnover of USD 24 million or equivalent, calculated as total certified payments received for contracts in progress or completed, within last Three (03) years.
   - Participation in at least two (02) contract, within the last eight (08) years, that have been successfully or substantially completed and that are similar to the proposed works, where the value of Bidder's participation exceeds USD 20 Million or equivalent. The similarity of the Bidder's participation shall be based on the physical size nature of works, complexity of methods, technology or other characteristics described in Section 6, (Employer's Requirements).
   - The Bidder must demonstrate access to, or availability of, liquid assets, lines of credit or other financial resources, (other than any contractual advance payments) to meet the Bidder's financial resources requirement of this contract assessed as USD 6.0.M or equivalent, excluding other financial requirements.
   - Supply and laying of 150 km uPVC pipe with diameter 90mm to 225mm within 5 years in at least one contract
   - Supply and laying of 10 km PE Pipe with diameter 110mm to 280mm within 5 years in at least one contract
   - Construction of storeyed building of total floor area not less than 100 sq.m within 5 years in at least one contract
5. Interested bidders may inspect the Bidding Document free of charge and obtain further information at the office of the Assistant General Manager, (Tenders and Contracts), National Water Supply & Drainage Board (NWSDB), Galle Road, Ratmalana, telephone 011-2635885 or 011-2638999 Ext. 1750 or facsimile number 011-2635885 (E-mail: agmtenders@waterboard.lk).
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application on a business Letterhead and upon payment of a non-refundable fee of LKR 100,000.00 plus VAT in cash (or US$ 850 including VAT) to the Assistant General Manager (Tenders and Contracts), NWSDB, Galle Road, Ratmalana, from 29/03/2017 until 17/05/2017 during 09:00 hours to 15:00 hours on normal working days.
7. The NWSDB will promptly dispatch the documents by registered airmail or by courier service on request, with an additional payment of US$ 175.00. However under no circumstances will the NWSDB be held responsible for late delivery or loss of documents so sent out. Payment could be made on Swift Transfer.

   Swift Code – BCEYLKLX IBAN – 7010-051-1994324
   Bank of Ceylon, Dehiwala Branch, Sri Lanka

8. A site visit will be conducted on 18/04/2017 commencing at 09.00hrs from 124, 1st Cross Street, Jaffna. A Pre-Bid meeting would be held on 24/04/2017 commencing at 09.30 hrs at NWSDB, Galle Road, Ratmalana, Colombo.
9. Bids shall be delivered to the Office of the Director (Procurement), Ministry of City Planning and Water Supply, "Lakdiya Medura", No 35, Sunil Mawatha, Pelawatta, Battaramulla, Sri Lanka to receive on or before 10.00 hrs on 17/05/2017 together with a Bid Security in the amount and other details as specified in the Bidding Document (Data Sheet). Bids will be opened immediately after the deadline for submission of bids, in the presence of the bidders' representatives who choose to attend.
10. The Ministry of City Planning and Water Supply, and the National Water Supply & Drainage Board, will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation, attending pre-bid meeting and delivery of bids.

**Chairman**
**Cabinet Appointed Procurement Committee**
**Ministry of City Planning and Water Supply**

## சமைWல்...! சமைWல்...!



### கோலி பஜ்ஜி

**தேவையான பொருட்கள்:**

* கோதுமை மா - 250 கிராம்
* புளித்த தயிர் - 1 கப்
* பேக்கிங் பவுடர் - 1 தேக்கரண்டி
* பச்சை மிளகாய் - 2
* இஞ்சி, பெருங்காயம், கறிவேப்பிலை
* கொத்தமல்லி - சிறிதளவு
* உப்பு - சிறிதளவு
* எண்ணெய் - தேவையான அளவு
* தண்ணீர் - தேவையான அளவு

**செய்முறை**

ஒரு பாத்திரத்தில் கோர்துமை மா, தயிர், பேக்கிங் பவுடர், உப்பு, தண்ணீர் சேர்த்து கெட்டியாகக் கரைக்கவும். இரண்டு மணி நேரம் ஊறவிடவும்.

பிறகு வெட்டி வைத்த பச்சை மிளகாய், இஞ்சி, பெருங்காயம், கறிவேப்பிலை, கொத்தமல்லியைச் சேர்த்து மாவைக் கையால் நன்றாகக் கலக்கவும். கடாயில் எண்ணெயைக் காயவிட்டு மாவைச் சிறிய போண்டாகளாக போடவும். பொன்னிறமாகப் பொரித்து எடுத்தால் கோலி பஜ்ஜி ரெடி!!!

பா.மலரம்பிகை



# பிரசவத்திற்கு பின் உடல் எடை குறைய

பிரசவத்திற்கு பிறகு பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுள் உடல் எடை அதிகரிப்பு முக்கியமானது. அதிலும் ஒரு சில பெண்களுக்கு வழக்கத்தை விட உடல் எடை கிடுகிடுவென உயர்ந்து விடும். எடை அதிகரித்துவிட்டால், அதிரடியாக அதை குறைக்கும் முயற்சிகளில் ஈடுபடக்கூடாது. போதுமான அளவு சத்துணவுகளை சாப்பிட்டு மிதமான முறையில் எடைக்குறைப்பில் ஈடுபடவேண்டும்.

கர்ப்பக் காலத்தில் கடைப்பிடித்த உணவு பழக்கவழக்கங்களில் அத்தியாவசியமானவற்றை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். அதிக அளவு தண்ணீர் பருகுவது அவசியம். அது உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றும். கிரை வகைகள், மீன் உணவுகள் தவறாமல் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தாய்ப்பால் கொடுக்கும் பெண்களின் உடல் ஆரோக்கியத்திற்கும், உடல் எடை குறைப்பிற்கும் கல்சியம் சத்து நிறைந்த உணவுகளை சாப்பிடுவது அவசியம். குறிப்பாக பால், தயிர் போன்றவற்றை அதிகம் பருக வேண்டும்.

எலுமிச்சை உடல் எடையை குறைப்பதோடு உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றவும் துணைபுரியும். வெதுவெதுப்பான நீரில் எலுமிச்சை சாற்றினை பிழிந்து அதனுடன் தேன் சேர்த்து வெறும் வயிற்றில் காலையில் குடித்தால் உடலில் தங்கியுள்ள கொழுப்பு கரையும். அது எடை குறைப்புக்கு முன்னோட்டமாக அமையும். உணவு அளவை குறைத்து அதற்கு ஈடாக காய்கறிகள், பழங்கள், தானியங்கள் போன்றவற்றை அதிகம் சேர்க்க வேண்டும். யோகாசனம் மற்றும் எளிமையான உடற்பயிற்சிகளை அன்றாடம் செய்வதையும் வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.



# விரல்களில் கருமையா?

பெண்களின் முகத்தை விட கை, கால்கள் கருத்தால் அது கவலையே அளிக்கும். எனவே கருத்துள்ள விரல்களை, கைகளை இப்படியும் வெண்மையாக்கலாம்.

3 தேக்கரண்டி கடலை மா, 2 தேக்கரண்டி எலுமிச்சைச் சாறு மற்றும் 1 தேக்கரண்டி பால் இவைகளை கலந்து விரல்களின் மீது மசாஜ் செய்ய வேண்டும். சிறிது நேரம் ஊற வைத்து பின்னர் வெதுவெதுப்பான தண்ணீரில் கழுவி விடுங்கள். ஒரு நாளைக்கு இரண்டு முறை இதை செய்து வந்தால் கருத்த நிறம் விரைவில் சரியாகும்.

வேக வைத்து மசித்த உருளைக் கிழங்கு - 1, தேன் - 2 தேக்கரண்டி, பால் - 2 தேக்கரண்டி, எலுமிச்சைச் சாறு - 2 தேக்கரண்டி, மஞ்சள் தூள் -1 தேக்கரண்டி இவைகளை கலந்துக் கொள்ள வேண்டும். அதனை விரல்களின் மீது தடவி 20 முதல் 25 நிமிடங்கள் வரை வைத்திருக்க வேண்டும். பின்னர் குளிர்ந்த நீரினால் கழுவிட வேண்டும்.

# முகப்பருக்கள் வராமல் தடுக்க....

முகத்தின் அழகை கெடுக்கும் ஒரு விடயம் என்றால், அது முகப்பருக்கள் தான். எனவே முகத்தில் பருக்கள் வரும் முன் பாதுகாத்துகொள்ள வேண்டும்.

மேக்கப்பை அதிக நேரம் கழுவாமல் வைத்திருந்தால், அது சருமத்தில் எண்ணெய்ப் பசையை அதிகரித்து பக்டீரியாக்களுக்கு உணவாகிவிடும். இதனால் முகப்பரு மற்றும் கரும்புள்ளிகள் உண்டாகி விடும்.

அதிக சூரியக் கதிர்வீச்சினாலும் முகப்பருக்கள் உண்டாகும். எனவே, அதிக நேரம் வெயிலில் இருப்பதையும் குறைத்து கொள்வது நல்லது.

ஐஸ்கிரீம், கூல் ட்ரிங்ஸ் போன்ற உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும். சரியான நேரத்தில் ஆரோக்கியமான உணவுகளைச் சாப்பிட வேண்டும். பச்சை காய்கறிகள், பழங்கள், ஜூஸ், தயிர், எலுமிச்சை, முளை கட்டிய பயறு வகைகள் ஆகியவற்றை அதிகமாக எடுத்துக் கொள்ளுங்கள்.

உடலில் நீர்த்தன்மை அதிக அளவு இருப்பது அவசியம். அதிக தண்ணீர் குடிக்க வேண்டும். அவை உடலின் இரத்த ஓட்டத்தைச் சீராக்கும்.

புதினா, எலுமிச்சை, தேன், வேப்பிலை, மஞ்சள், தயிர் போன்ற வீட்டில் கிடைக்கும் இயற்கையான பொருட்களை முகத்திற்கு பயன்படுத்துங்கள். அவை பக்க விளைவுகள் ஏதுமில்லாமல் உங்கள் முகப்பரு பிரச்சினையை சரிசெய்யும்.



# குழந்தைகள் ஓடியாடி விளையாடினால் நினைவாற்றல் அதிகரிக்கும்

குழந்தைகள் வீடியோ கேம்களை ஒதுக்கி வைத்துவிட்டு, ஓடியாடி விளையாடினாலே அவர்களுடைய மூளையின் இயக்கம் அதிகரிக்கும். அறிவாற்றல் மேம்படுவதோடு கல்வியிலும் அவர்கள் சிறந்து விளங்குவார்கள்.

குழந்தைகள் தினமும் தொடர்ந்து உடற்பயிற்சி செய்து வருவதால், அவர்களுடைய திறன்கள் அதிகரிக்கின்றன. ஊக்கப்படுத்துதல், நம்பிக்கை, தன் முன்னேற்றம், பெற்றோர்களுடனான உறவு ஆகிய வாழ்வியல் திறன்களும் அதிகரிக்கின்றன.

குழந்தைகள் சிறுவயதில் உடற்பயிற்சி செய்து வந்தால், அது பிற்காலத்திலும் அவர்களை இதய நோய் மற்றும் நீரிழிவு நோயிலிருந்து காக்கும்.

தொடர்ந்து மேற்கொள்ளப்படும் உடற்பயிற்சியானது, இயற்கையாகவே உடலின் இயக்கத்தை சீராக்குகிறது. இதயநோய்கள் வருவது இயல்பாகவே தடுக்கப்படுகிறது. உடற்பயிற்சி இதயத்துக்குச் செல்லும் தசைகள் மற்றும் நரம்புகளின் இயக்கத்தைச் சீர்படுத்துகிறது.

பள்ளிக்குச் செல்வதற்கு முன்பும் பின்பும் குழந்தைகள் மேற்கொள்கிற, உடற்பயிற்சியானது, குழந்தைகளின் கல்வியையும் மேம்படுத்துகிறது. நினைவாற்றலை அதிகரிக்கிறது.

# தேவையற்ற உரோமங்களை அகற்ற

கடலை மாவு - 1 மேசைக்கரண்டி, சீனி - 2 மேசைக்கரண்டி, கற்றாழை ஜெல் - 1 மேசைக்கரண்டி, எலுமிச்சை சாறு - 2 தேக்கரண்டி இவைகளை எடுத்துகொள்ளவேண்டும்.

முதலில் ஒரு பாத்திரத்தில் கடலை மா, சீனி மற்றும் கற்றாழை ஜெல் சேர்த்து கட்டி சேராதவாறு கலந்து கொள்ள வேண்டும். அத்துடன் 2 மேசைக்கரண்டி எலுமிச்சை சாற்றினை சேர்த்து நன்கு பேஸ்ட் செய்து கொள்ள வேண்டும். தயாரித்து வைத்துள்ள கலவையை உரோமம் உள்ள பகுதியில் தடவி, அதன் மேல் பஞ்சை வைக்க வேண்டும்.

30 நிமிடம் கழித்து, நன்கு காய்ந்த பின் உரித்து எடுக்க வேண்டும். இப்படி செய்வதால், உரோமம் நீங்குவதோடு, அப்பகுதியும் பளிச்சென்று இருக்கும்.

# ஆசிரியர் வெற்றிடங்கள் அனைத்தும் இரண்டு வருடங்களில் நிரப்பப்படும்

## மௌலவி ஆசிரியர்களுக்கும் நியமனம்

### கல்வி அமைச்சருக்கு இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் பாராட்டு

இலங்கை ஆசிரியர் சேவையில் காணப்படும் வெற்றிடங்கள் அனைத்தும் இரு வருடங்களுக்குள் நிரப்பப்பட்டுவிடும். அதற்குத்தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய 50ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளது.

அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளின் காரணமாக ஆசிரியர் சேவையில் 60ஆயிரத்துக்கும் அதிகமான வெற்றிடங்கள் நிலவுவதாகவும், இவ்வாறு பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் சமமின்மையைப்போக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற 238 இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு திறந்த போட்டிப்பரீட்சை மூலம் தெரிவான உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

அத்தோடு, தேசிய அல்லது மாகாண மட்டத்தில் அல்லாது, பாடசாலை மட்டத்தில் வெற்றிடமாகவுள்ள இடங்களுக்கு ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ள இடமளிக்கும் புதிய திட்டமொன்றை இதன்போது அறிமுகப்படுத்த ஆராய்ந்து வருவதாகவும், இது தொடர்பான நிபந்தனைகள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் பற்றிய வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துளார்.

கல்வி அமைச்சின் இந்நடவடிக்கைகளைப் பெரிதும் பாராட்டியுள்ள இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், நல்லாட்சி அரசின் ஜனாதிபதி, பிரதம மந்திரி மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோர்களுக்கு துறைசார் தொழிற்சங்கம் என்றரீதியில் நன்றியையும் தெரிவித்துள்ளது.



2015இல் இலங்கை கல்வித் துறையின் பாடசாலைக் கட்டமைப்பில் 352தேசிய பாடசாலைகள் உட்பட 10,144 பாடசாலைகள். அங்கு கல்வி பயில 805,593 தேசிய பாடசாலை மாணவர்கள் உட்பட 4,129,534 மாணவர்கள். அவர்களுக்கு கல்வி புகட்ட 37,232 தேசிய பாடசாலை ஆசிரியர்கள் உட்பட 233,883 ஆசிரியர்கள்.

2017பாதீட்டில், 10இலட்சம் வேலை வாய்ப்புக்கள், அதில் 48ஆயிரம் ஆசிரியர் நியமனங்கள். அதில் 5ஆயிரம் பட்டதாரி நியமனங்கள் என்ற பிரதம மந்திரி ரணில் விக்கிரம சிங்கவின் கொள்கைப்பிரகடனம்.2015தேர்தல் விஞ்ஞாபனத்தில், 60மாதங்களில் புதிய நாட்டை உருவாக்கும் ஐந்து அம்ச செயல் முறைகளில் முஸ்லிம் விவகாரங்களில் தற்போது வெற்றிடமாகவுள்ள மௌலவி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த மௌலவிமார்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

என்பவற்றிற்கு மத்தியிலேயே 50ஆயிரம் ஆசிரியர் நியமனத்திற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் பற்றிய கல்வி அமைச்சரின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மத்திய மாகாணத்தில்; வேலைவாய்ப்புக்கள், ஆசிரியர் நியமனங்கள் வழங்க அரசு தயார். பட்டதாரிகள் தயாரில்லை என அதிகாரிகள் குற்றச்சாட்டு. கிழக்கில் அண்மையில் 250 ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பித்தோர் தொகை 5,701. அதில் 222 பேருக்கு மாத்திரம் நியமனம். வடக்கில் 846 வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பித்தோர் தொகை 2,455. அதில் 559 பேருக்கு மாத்திரம் நியமனம். சப்ரகமுவவில் 300 வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பித்தோர் 33. அதில் 18பேருக்கு மாத்திரம் நியமனம். மத்திய மலையகத்தில் விண்ணப்பித்தோர் 536 மாத்திரமே. அதிலும் முஸ்லிம்கள் 34. தமிழர்கள் 02 மட்டும். ஏப்ரலில் நேர்முகத்தேர்வின்பின் நியமனம் வழங்கப்படவுள்ளது.

கிழக்கிலோ இதற்குத் தீர்வாக அரசின் 10இலட்சம் வேலை வாய்ப்பில் 2இலட்சத்தை தமது மாகாணத்திற்கு வழங்கவேண்டும் என்ற கோரிக்கை கிழக்கு முதல்வரால் விடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு, க.பொ.த. சாதாரண தகைமையுடன் உடற்கல்வி ஆசிரியர்கள் நியமிக்கப் படுவதுபோல், பட்டதாரிகள் பற்றாக்குறையான பாடங்களுக்கு, கல்வியியல் கல்லூரிகளுக்குத் தெரிவாகத் தவறுபவர்கள் மத்தியிருந்து ஆசிரியர்களைத் தெரிவுசெய்யலாம் என்ற விடயமும் கல்வி அமைச்சில் கலந்துரையாடப்பட்டுள்ளதால்,அதுவும் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

தெற்கில்,அண்மையில் 1200பட்டதாரி ஆசிரியரகள்; நியமனம் செய்யப்பட்டுள்ளனர். நியமனத்தில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுவதாகச் செய்யப்பட்ட புகாரையடுத்து, வெற்றிடங்களுக்கு, தமிழ் மொழிமூல பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பணிப்புரை விடுத்துள்ளார். வடக்கில் விரைவில் 631 பட்டதாரிகளை நேர்முகப் பரீட்சை மூலம், ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ள விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதுவரை இங்கு 1500பட்டதாரிகள் ஆசிரியர் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அதில் 559 பட்டதாரிகள் கடந்த மார்ச்13இல் நியமனம் பெற்றவர்கள்.

கிழக்கில் 5023 ஆசிரியர்களுக்கும், இதில் 1134பட்டதாரிகளுக்கும் வெற்றிடங்கள் நிலவுகின்ற நிலையில், போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2016இல் 299மற்றும் 2017மார்ச் 19இல் 104கணித, விஞ்ஞான, ஆங்கில பட்டதாரிகளுக்கும், 2017 பெப்ருவரி 20இல் 222 கலை, வர்த்தக, தொழில் நுட்ப பட்டதாரிகளுக்கும்; ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அமைச்சரவையில் கிடைக்கப்பெற்ற அனுமதிக்கமைய முதலில் 10,022 ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்;, அவற்றில் தேசிய பாடசாலைகளுக்கௌ 1,093 பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கவும், தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்கு 1,177 ஆரம்பக்கல்வி ஆசிரியர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.



பேருவளைமாவட்ட ஆஸ்பத்திரிக்கு அத்தியாவசிய தேவையாக உள்ள மருந்து வகைகளை பாதுகாப்பாக வைக்கக்கூடிய குளிரூட்டி மற்றும் அலுமாரிதொகுதியை சீனன் கோட்டையைச் சேர்ந்த இளம் வர்த்தகர்கள் இருவர் நேற்றுமுன்தினம் அன்பளிப்புச் செய்தனர். அர்ஷத் ஸவாஹிர் அலுமாரிதொகுதியையும், பஹ்மி ஹில்மி குளிரூட்டி உபகரணத்தையும் கொள்வனவு செய்து அன்பளித்தனர்.இவற்றை மாவட்ட வைத்திய அதிகாரி பத்மிரண வீரவிடம் கையளித்த போது பிடிக்கப்பட்ட படம். முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.எம். அம்ஜாத், சீனன்கோட்டை பள்ளிச்சங்க செயளாளர் எம்.எம்.எம். சிஹாப், சீனன் கோட்டை ஜமாத்தே இஸ்லாமி கிளைத் தலைவர் பிலால் அப்துர் ரஹ்மான், ஆஸ்பத்திரி கமிட்டி உறுப்பினர் ஜமீல் ஹசன் உற்பட சமூக நல இயக்கங்களின் உறுப்பினர்களும் படத்தில் காணப்படுகின்றனர். சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் அனுசரணையுடன் இந்த உபகரண தொகுதி கையளிக்கப்பட்டது.

(படம் - பேருவளை பி.எம்.முக்தார்)



# சாத்தியமாகுமா முஸ்லிம் கூட்டமைப்பு

**✱ எஸ். அஷ்ரப்கான்**

எந்த இலக்கையும் அடையாளம் காணாமல் அல்லது சமூகத்தின் மொத்த நன்மைக்காக எங்களின் தனிப்பட்ட அடையாளங்களை களைந்து விட்டு ஒரு பொது அடையாளத்தின் கீழ் வருவதற்கும் ஆயத்தமில்லாத கூட்டமைப்பைப் பற்றிப் பேசுகின்றோம் என்றால் அது என்ன வகையான முஸ்லிம் கூட்டமைப்பு ? என்று சட்டத்தரணி வை.எல்.எஸ்.ஹமீட் கேள்வி எழுப்பியுள்ளார்.

முஸ்லிம் கூட்டமைப்பு தொடர்பாக அவர் மேலும் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது,

இன்று முஸ்லிம் கூட்டமைப்பு தேவை பற்றி பரவலாகப் பேசப்படுகின்றது. அதே நேரம் சிலர் அது சாத்தியம் என்றும் சிலர் அது சாத்தியமில்லை என்றும் அது சாத்தியமில்லை ஆனாலும் அதனை சாத்தியமாக்குவதற்கான யூகங்கள் வகுக்கப்பட்டு அது முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் முன்வைக்கின்றார்கள். முஸ்லிம் கூட்டமைப்பொன்று அவசியமானால் அந்த அவசியத்தை ஏற்படுத்துகின்ற காரணிகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனவா? அந்தக் காரணிகளை உருவாக்கிய காரணங்கள் அடையாளம் காணப் பட்டிருக்கின்றனவா? இந்தக் கூட்டமைப்பு அடைய எத்தனிக்கும் இலக்கு அல்லது இலக்குகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனவா? அதாவது, அந்தக் காரணங்களை இந்தக் கூட்டமைப்பு முழுமையாக இல்லாமலாக்குமா? அல்லது அந்தக் காரணிகளின் எந்த மட்டத்தை இல்லாமலாக்கும். அல்லது நிறைவு செய்யும். என்ற கேள்விகள் இங்கு எழுகின்றன.கூட்டமைப்பு என்பதன் அடிப்படை நோக்கம் ஒற்றுமை அல்லது பிரிந்து செயற்படுபவர்கள் ஒன்றுபட்டு செயற்படுவது என்பதாகும். அதாவது, அரசியலில் நீண்ட காலம் அல்லது இடைப்பட்ட காலம் அல்லது குறுகிய காலம் ஒன்றுபட்டு செயற்படுவதாகும். ஆனால் நிரந்தரமாக ஒன்றுபட்டு செயற்படுவதல்ல. ஏனெனில் அரசியல் கூட்டமைப்பு என்பதன் பொருள் தாங்கள் தாங்களாகவே இருந்து கொண்டு குறித்த இலக்கை அடைவதற்காக ஒன்றுபடுவதே. தாங்கள் தாங்களாக என்பதன் பொருள் தங்கள் கட்சிகள் அல்லது கட்டமைப்புக்கள் அவ்வாறே இருக்க அந்தக் கட்சிகள் அல்லது கட்டமைப்புக்கள் ஒன்று சேர்வது.

இது சில நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து ஒரு சம்மேளனத்தை அமைப்பது போன்றதாகும். அச்சம்மேளனத்தில் இணைவதன் மூலம் எந்தவொரு நிறுவனமும் தன்னை இழந்து விடுவதில்லை. மாறாக தன்னுடைய செயற்பாடுகளில் சிலவற்றைக் கூட்டாக செய்வதாகும். அவ்வாறு இல்லாமல் சேருவதாக இருந்தால் அதற்கு கூட்டமைப்பு என்று பெயர் வராது. மாறாக அது ஒரு புதிய கட்சி என்று வர வேண்டும். இங்கு முயற்சிக்கப்படுவது புதிய கட்சியா? அல்லது கூட்டமைப்பா? கூட்டமைப்பு என்ற சொல்லுக் குள்ளேயே நிரந்தர மற்றது என்ற பொருள் பதிந்திருக்கின்றது.

கூட்டமைப்புக்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று ஒரு நீண்ட இலக்கைக் கொண்டது. உதாரணம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவர்களுக்கு ஒரு நீண்ட அடையாளம் காணப்பட்ட இலக்கு இருக்கின்றது. அதுதான் தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆழ்வதற்கான ஒரு சுயாட்சி அலகைப் பெறுவது. இவ்வாறான ஒரு நீண்ட இலக்கு முஸ்லிம்களுக்காக அடையாளம் காணப்பட்டிருக்கின்றதா? அவ்வாறாயின் அது என்ன? அந்த இலக்கினை அடைவதற்காகவா பிரிந்து நிற்கின்ற முஸ்லிம் அரசியல் சக்திகளை ஒன்றிணைத்து ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கப்படுகின்றது.

இரண்டு, இடைக்கால இலக்கு, உதாரணம் தேர்தல் கூட்டமைப்புக்கள் அதாவது, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ.ல.சு.கட்சி, போன்றவை தேர்தல் கூட்டமைப்புக்களை அவ்வப்போது ஏற்படுத்துகின்றன. இவற்றின் நோக்கம் தேர்தல்களில் அதிகூடிய ஆசனங்களைப் பெறுவதும் சாத்தியமானால் ஆட்சியமைப்பதும் (ஸ்ரீ.ல.மு.கா. கட்சியும், அ.இ.ம .கா. கட்சியும் பதுளை தேர்தலில் ஒன்றிணைந்ததும் ஒரு தேர்தல் கூட்டமைப்பே.)

மூன்றாவது குறிப்பிட்ட ஒரு சில விடயங்களுக்காக மட்டும் ஒன்று சேர்ந்து செயற்படுவது. அதாவது, (Issue based alliance/ unity) உதாரணமாக அரசியலமைப்பு மற்றும் அதிகாரப் பரவலாக்களில் ஒரு பொது நிலைப்பாட்டை எடுப்பதற்காகவும் அந்த நிலைப்பாட்டை அடைவதற்காகவும் ஒன்றுபடுவது,

இந்த 3 வகையான கூட்டமைப்பும் இலக்குகள் கொண்டதாகும். இன்று கூட்டமைப்புப் பற்றி பேசுகின்றவர்கள் இந்த இலக்கில் ஏதாவது ஒன்றை அடையாளம் கண்டிருக்கின்றார்களா? அந்த இலக்கினை அடைவதற்காகவா முஸ்லிம் கூட்டமைப்பினைப் பற்றிப் பேசுகின்றார்கள். அல்லது இந்த மூன்றிற்கும் அப்பால் 4 வது ஒன்று இருக்கின்றதா? அவ்வாறாயின் அது என்ன4 வது இருப்பதற்கு சாத்தியமானது தங்களது தனிப்பட்ட கொள்கைகள் கட்டமைப்புக்கள் அனைத்தையும் விட்டு விட்டு முஸ்லிம் சமுதாயத்தின் மொத்த நன்மைக்காக ஒன்றுபடுவது, அவ்வாறு ஒன்றுபட்டால் அது கூட்டமைப்பாக இருக்க முடியாது. அது ஒரு புதிய அல்லது தனிக் கட்சியாகத்தான் இருக்க முடியும்.

இன்று இருக்கின்ற ஒவ்வொரு கட்சியும் அடுத்த கட்சியை பிழை கூறியே உருவாகியவை. இன்றும் அவ்வாறு பிழை கூறியே தொடர்ந்தும் அரசியல் செய்பவை. எனவே அவை அனைத்தும் கடந்த காலங்களை மறப்போம், பிழைகளை மன்னிப்போம் அனைவரும் சமுதாய நன்மைக்காக ஒன்றிணைந்து ஒரு தகுதியான ஒற்றைத் தலைமைத்துவத்தின் கீழோ அல்லது ஒரு பொருத்தமான கூட்டுத் தலைமைத்துவத்தின் கீழோ செயற்படுவோம். என்ற நிலைப்பாட்டிற்கு வந்தால் அது முஸ்லிம்களின் பொது நன்மைக்காக ஒரு நிரந்தர ஒற்றுமையை நோக்கியதாகும்.

அவ்வாறாயின் தங்கள் தனிக் கட்சிகளை அல்லது கட்டமைப்புக்களை வைத்துக் கொண்டு இணைய முடியாது. அவற்றை வைத்துக் கொண்டு இணைவதாயின் நாங்கள் நாங்களாகவே இருந்து கொண்டு தான் இணைகின்றோம். ஒன்று குறித்த இலக்கை அடைந்ததன் பின்னர் அல்லது தேவைப்பட்டால் அதற்கு முன்னர் பிரிந்து செல்வதற்கு தயாராக இருக்கின்றோம் என்ற நிச்சயமற்ற தன்மையை ஆரம்பத்திலேயே மறைமுகமாக பிரகடனப்படுத்துவதற்குப் பெயர் தான் கூட்டமைப்பாகும்.

எனவே நாங்கள் மேற்சொன்ன இலக்கையும் அடையாளம் காணாமல் அல்லது சமூகத்தின் மொத்த நன்மைக்காக எங்களின் தனிப்பட்ட அடையாளங்களை களைந்து விட்டு ஒரு பொது அடையாளத்தின் கீழ் வருவதற்கும் ஆயத்தமில்லாத கூட்டமைப்பைப் பற்றிப் பேசுகின்றோம் என்றால் அது என்ன வகையான கூட்டமைப்பு ? ஒரு சிலரைப் பிழையானவர்கள் என்று அடையாளம் கண்டு அவர்களை வீழ்த்துவதற்கு இன்னும் சில பிழையானவர்கள் மற்றும் பிழையானவர்களின் பிழைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து சமூக இலக்கு எதுவுமில்லாமல் தாங்கள் அடைய முடியாமல் போன அல்லது அடைய எதிர்பார்க்கின்ற பதவிகளைப் பெறுவதற்காக ஏற்படுத்தப் போகின்ற கூட்டமைப்பா?

இந்தக் கூட்டமைப்பு சிலருக்கு பதவிகளுக்காகவும், சிலருக்கு மற்றவர்களை வீழ்த்துவதற்காகவும், இன்னும் சிலருக்கு தன்னை உயர்த்துவதற்காகவும் என்ற தன்னிலை நோக்கிய ஒரு முன்னெடுப்பானால் முஸ்லிம் சமுதாயம் இதுவரை ஏமாற்றப்பட்டது போதாது; என்று அதை விட பல மடங்கு ஏமாற்றுவதற்கான ஒரு முன்னெடுப்பாகவே அது இருக்க முடியும். எனவே யாரையும் யாரும் ஏமாற்ற முற்பட வேண்டாம். கூட்டமைப்பு என்ற கவர்ச்சிகரமான சொல்லுக்குள் அப்பாவித்தனமாக அறியாதவர்கள் பலியாகி விடவும் வேண்டாம். மாறாக கூட்டமைப்பைப் பற்றிப் பேசுபவர்கள் அந்தக் கூட்டமைப்பு முதலில் அடைய எதிர்பார்க்கின்ற இலக்கைப் பற்றிப் பேசுங்கள். அந்த இலக்கை அடையாளம் கண்ட பின் கூட்டமைப்பைப் பற்றிப் பேசுங்கள். போகின்ற இடம் தெரியாது வாகனம் ஹயர் பண்ண முயற்சிக்க வேண்டாம். அல்லது எல்லோரும் கடந்த கால தவறுகளுக்காக மன்னிப்புக் கேட்டு இறைவனிடத்தில் தௌபா செய்து தனித்தனி அமைப்புகளையெல்லாம் கலைத்து விட்டு ஒரு புதிய தனி அமைப்பாக இஹ்லாசுடன் ஒற்றுமையாக செயற்பட முன்வாருங்கள். அதற்கு ஆயத்தமில்லை என்றால் அவரவர் அவரவரது அரசியலைச் செய்யுங்கள். அது குழி பறிப்பு அரசியலா? நேர்மையான அரசியலா ? என்பதை சமூகம் தீர்மானிக்கட்டும். சமூகம் திருந்தாத வரை ஒரு போதும் நேர்மையான அரசியலை எந்தக் கட்சியிடமிருந்தோ, எந்தக் கூட்டமைப்பிடமிருந்தோ எதிர்பார்க்க முடியாது. இன்றைய சமூக வலைத்தளங்களில் பலராலும் இடப்படுகின்ற பதிவுகள் சமூகம் திருந்து வதற்கு இன்னும் நாட்கள் இருக்கின்றன என்ற சமிக்ஞையைத் தான் வழங்கிக் கொண்டிருக்கின்றது.

ஆகக் குறைந்தது எதிர்வரும் றமழான் மாதத்திலாவது கடந்தகால பிழையான அரசியல் தலைமைத்துவங்களும்/ பிரதிநிதித்துவங்களும் மற்றும் பிழையான தலைமைத்துவங்கள்/ பிரதிநிதித்துவங்கள் உருவாவதற்கு செய்த பங்களிப்புகளுக்காக நாம் எல்லோரும் இறைவனிடத்தில் தௌபா செய்து எதிர்காலத்தில் நெஞ்சுரமும், நேர்மையும், சமூக வாஞ்சையுமுள்ள தலைமைத்துவங்களையும் பிரதிநிதித்துவங்களையும் தெரிவு செய்ய மொத்த சமூகமும் திடசங்கற்பம் பூண முடியுமானால் இறைவன் சிறந்த தலைமைத்துவத்தையும் பிரதி நிதித்துவங்களையும் சமூகத்திற்கு தருவான் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## ஷரிபுத்தீன் வித்தியாலயத்தில் இரண்டு மாணவிகளுக்கு 9 ஏ

(மருதமுனை நிருபர்)

வெளியான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் படி பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலய மாணவிகளான றாசிக் பர்ஜீஸ்,அபுல்ஹசன் வஜீஹா பேகம் ஆகியோர் ஒன்பது பாடங்களிலும் 'ஏ' சித்திகளைப்பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்ததுள்ளதாக அதிபர் எம்.எம்.முகம்மட் நியாஸ் தெரிவித்தார்.

இப்பாடசாலையில் வரலாற்றில் இரண்டு மாணவிகள் ஒரே தடவையில் ஒன்பது பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றிருப்பது இதுவே முதல் தடவையாகும். இம்முறை நாற்பது மாணவர்கள் பரீட்சைக்குத் தொற்றி 25 மாணவர்கள் கல்விப் பொதுத் தராதர உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

## மட்டு.புனித மிக்கேல் கல்லூரி மாணவர்கள் 17 பேர் 9 சித்தி

(காத்தான்குடி பழுலுல்லாஹ் பர்ஹான்)

2016 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளதாக புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை அதிபர் ஆர்.வெஸ்லியோ வாஸ் தெரிவித்தார்.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் இணையத் தளத்தில் இன்று வெளியான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை மாணவர்கள் 17 பேர் 9 ஏ சித்திகளையும்,10 பேர் 8 ஏ சித்திகளையும்,7பேர் 7ஏ சித்திகளையும் பெற்று எமது பாடசாலைக்கும் ,மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளதாகவும்,எமது பாடசாலையில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களின் முழுமையான விபரம் இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் எமது பாடசாலைக்கு அனுப்பப்பட்ட பின்னர் அதை முழுமையாக வெளியிட முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கொழும்பில் இன்று நீர் வெட்டு

(பேருவளை நிருபர், பி.எம். முக்தார்)

அம்பதலை பிரதான நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான மின்சார விநியோகம் தடைசெய்யப்படுவதனால் இன்று மு.ப. 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரையிலான 15 மணிநேர நீர் வெட்டுகொழும்புமற்றும் அதனைச் சூழவுள்ளபலபகுதிகளில் அமுல் செய்யப்படும் எனதேசியநீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

கொழும்பு, தெஹிவளை, கல்கிஸை, கோட்டே, கடுவலை மாநகர சபை பகுதி, மஹரகமை, பொரலஸ்கமுவ, கொலென்னாவ நகர சபை பகுதிகொடிகாவத்த - முல்லேரியாவபிரதேச சபை பகுதிமற்றும் இரத்மலானைபகுதிகளைச் சேர்ந்தவர்கள் முன் கூட்டியே நீரைச் சேமித்து சிக்கனமாக பாவிக்கும் படி சபை கேட்டுள்ளது.

## சூழலை அசுத்தமாக வைத்திருந்த 58 திருமலை வாசிகளுக்கு தண்டம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவிற்குற்பட்ட பகுதியில் டெங்கு பரவும் விதத்தில் சுற்றுப்புறச்சூழலை அசுத்தமாக வைத்திருந்த 58 நபர்களுக்கு 1500 ரூபாய் அபராதம் செலுத்துமாறு நேற்று (28) திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் பொது சுகாதார பரிசோதகர்கள்.உள்ளூராட்சி மன்றங்கள்.பொலிஸார் மற்றும் முப்படையினர்கள் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் பரவாமல் தடுப்பதற்குரிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி வந்தனர்.

இருந்தபோதிலும் திருகோணமலை. தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தும் டெங்கு பரவும் விதத்தில் சுற்றுப்புரச்சூழலை வைத்திருந்தவர்களுக்கே இன்றைய தினம் பிரதம நீதவான் எச்சரிக்கை விடுத்து இனிவரும் காலங்களில் இவ்வாறான குற்றங்கள் இடம் பெறக்கூடாது என கூறி 1500 ரூபாய் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

Bakeer Markar Centre for National Unity

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகமும்
தேசிய ஒற்றுமைக்கான பாக்கிர் மாக்கார் நிலையமும்
இணைந்து ஒழுங்கு செய்யும்

பாடசாலை மாணவர்களுக்கான அகில இலங்கை ரீதியிலான கட்டுரை / சித்திரப் போட்டி



**பொதுவான வழிகாட்டி :**

- கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிக்கான தலைப்பு "வேற்றுமையில் ஒற்றுமையே தேசத்தின் பலம்"ஆகும்.
- இப் போட்டிகளில் அரசாங்க பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவங்களின் மாணவ மாணவிகள் பங்குபற்றலாம்.

**பிரிவுகள் :**

- சிரேஷ்ட பிரிவு - தரம் 10 –தரம் 13
- கனிஷ்ட பிரிவு - தரம் 06 –தரம் 09
- ஆரம்ப பிரிவு - தரம் 01 –தரம் 05 (இப்பிரிவு சித்திரப் போட்டிக்கு மாத்திரமே)

- உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படும் ஆக்கமானது பொறுப்பாசிரியர் மற்றும் அதிபர் அல்லது நிறுவனத் தலைவரினால் போட்டியாளரின் படைப்பு என்று உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்கள் தெரிவுசெய்யப்படும். மாகாணமட்டத்தில் வெற்றியீட்டியவர்கள் மத்தியிலிருந்து அகில இலங்கை ரீதியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்கள் தெரிவு செய்யப்படும்.

**பரிசில்கள் :**

அகில இலங்கை ரீதியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசில்கள்

| | |
|---|---|
| முதலாம் இடம் - | 50,000 ரூபாய் |
| இரண்டாம் இடம்- | 30,000 ரூபாய் |
| மூன்றாம் இடம் - | 25,000 ரூபாய் |

மாகாண ரீதியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசில்கள்

| | |
|---|---|
| முதலாம் இடம் - | 15,000 ரூபாய் |
| இரண்டாம் இடம்- | 10,000 ரூபாய் |
| மூன்றாம் இடம் - | 5,000 ரூபாய் |

போட்டியில் பங்குபற்றும் அனைவருக்கும் பங்குபற்றியதற்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**கட்டுரைப் போட்டி**

- கட்டுரைகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் முன்வைக்க முடியும். கட்டுரைகள் கையால் எழுதப்படல் விரும்பத்தக்கது என்பதுடன் தட்டச்சிடப்படுமாயின் வரிகளுக்கிடையே இரட்டை இடைவெளி விடப்படுதல் வேண்டியதுடன் அவை கறுப்பு மையினால் அச்சிடப்படல் வேண்டும்.
- கட்டுரையின் முழுவானது, வாசிப்போரை ஈர்ப்பதாகவும் சிந்திக்கக் கூடிய விடயமொன்றைக் கூறுவதாகவும் அமைதல் வேண்டும்.
- கட்டுரையில் உள்ளடக்கப்பட வேண்டிய சொற்களின் எண்ணிக்கை:
  சிரேஷ்ட பிரிவு- 500 முதல் 1000 வரை
  கனிஷ்ட பிரிவு- 400 முதல் 600 வரை

- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும். இப் போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் அனைவரும் நடுவர்களினாலும் நோக்குனர்களினாலும் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படல் வேண்டும்.
- போட்டியாளர்களின் பெயர், கையொப்பம் மற்றும் பாடசாலையின் பெயர் ஆகியவற்றை கட்டுரை, சித்திரம், ஓவியம் ஆகியவற்றில் எழுதக் கூடாது.

**சித்திரப் போட்டி**

- அனைத்து பிரிவினரும் சித்திரம் வரையப்படும் தாளின் அளவு 18×14" ஆகும்.
- வரைவதற்காக பயன்படுத்தப்படும் மூலங்கள் : பென்சில், நீர் வர்ணங்கள்,
- சித்திரங்கள் போட்டியாளரின் சொந்த முயற்சியில் சுய உருவாக்கமாக வரையப்படுதல் வேண்டும்.
- உங்களால் வரையப்படும் சித்திரங்களுக்கு எதுவிதப் பாதிப்பும் ஏற்படாதவாறு அனுப்பப்படல் வேண்டும். முடியுமாயின் 'கூரியர்' (Courier) சேவையில் அனுப்பவும்.

ஆக்கங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதி 2017 மார்ச் மாதம் 31ஆம் திகதி ஆகும். உங்களது விண்ணப்பங்கள் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள், பணிப்பாளர், தேசிய தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம், இல.21, 6ஆம் மாடி, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**பாடசாலை மாணவர்களுக்கான அகில இலங்கை ரீதியிலான கட்டுரை / சித்திரப் போட்டிக்கான விண்ணப்பம்**

போட்டியாளரின் முழுப் பெயர்: ....................

வகை: (கட்டுரை/சித்திரம்)....................(சிரேஷ்ட /கனிஷ்ட /ஆரம்ப)..............

வயது :....................

பிறந்த திகதி:- நாள்.............. மாதம்:.............. ஆண்டு:..............

பால்: (ஆண்/பெண்):....................

பாடசாலையின் பெயர், முகவரி:....................

தொலைபேசி இலக்கம்: ....................

இக்கட்டுரை/சித்திரம் என்னுடைய சொந்த ஆக்கம் என்பதனை இத்தால் உறுதி செய்கிறேன்.

போட்டியாளரின் கையொப்பம்:.................... திகதி:....................

பாடசாலை அதிபர் / நிறுவனத்தின் தலைவரின் உறுதிச்சான்று

இந்த விண்ணப்ப படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள கட்டுரை/சித்திரம் விண்ணப்பதாரியின் சொந்த முயற்சியால் ஆக்கப்பட்டுள்ளதென்பதை இத்தால் உறுதிசெய்கிறேன்.

பொறுப்பாசிரியர் .................... அதிபர் / நிறுவனத் தலைவர் ....................

திகதி. ....................

( பாடசாலை / நிறுவனத்தின் முத்திரை)

[illegible]
அனுசரணை

நவமணி · DailyMirror

நவமணி


National Water Supply & Drinage Board

# நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

## விலைமனு அறிவித்தல்

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வழங்கல்கள் / வேலைகளுக்காக தகைமை மற்றும் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சார்பில் பெறுகைக் குழுவின் தவிசாளர் இத்தால் அழைக்கின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவைப்படும் கேள்விப் பிணைமுறி | தகைமை தேவைப்பாடுகள் | மதிப்பீட்டு செலவு(ரூபா) வெட் வரி நீங்கலாக | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | |
| அங்குனுகொலன்பெலஸ்ஸ நீர் வழங்கல் திட்டத்தின் அங்குனுகொலன்பெலஸ்ஸ பிரதான பம்பிக்கு DI குழாய்கள், உதிரிப்பாகங்கள், DI/CI வால்வுகள் பொருத்தல் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் வால்வு சேம்பர்களை அமைத்தல்<br>**ஒப்பந்த இல: RSC(S)/P&D/C/PL/PRISON/ANGUNUKOLAPELASSA/2016/115** | 35,000/- + பெ.சே. வரி | ரூபா. 2,258,000/- | கட்டிட கட்டுமான துறையில் c3 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987 இன் 3 ஆம் இலக்க சட்டத் தின் பிரகாரம் பதிவு சான்றிதழ் | 150.5 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை<br>தொலைபேசி/ தொலைநகல்: 011-2635885 | 26/04/2017 10.00 மணி |
| மாத்தளை பகுதி நீர் வழங்கல் திட்டத்தில் புதிய இணைப்புகளுக்கான ஒத்துழைப்பு சேவைகளை வழங்கல்<br>**ஒப்பந்த இல: RSC-C/KN/CIVIL/NC/MATALE/2017/42** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 30,000/- | நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையில் c8 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத் தில் பதிவு | 2.8 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்திய) கெடம்பே, பேராதனை<br>தொலைபேசி: 081-2386068,<br>தொலைநகல்: 081-2388027 | 19/04/2017 14.00 மணி |
| மாத்தறையில் நடுகல உள்ளீர்ப்பு சேனலை முன்னேற்றல்<br>**ஒப்பந்த இல: RSC(S)/P&C/C/INTAKE/NADUGALA/RH/2017-59** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 9,500/- | கட்டிட நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறைகளில் c9 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு | 0.70 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை<br>தொலைபேசி: 041-2229792,<br>தொலைநகல்: 041-2224769 | 19/04/2017 14.00 மணி |
| வவுனியா மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் RO நிலையங்களை அமைத்தல் (நன்டிமித்ரகம, நாமல்கம, போகஸ்வெவ, பெரியகுளம், கற்குளம் மற்றும் பாவற்குளம்)<br>**ஒப்பந்த இல: RSC/N/DGM/CKDu/CIVIL-1/VAVUNIYA/ 2017/04** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 100,000/- | கட்டிட கட்டுமான துறையில் c7 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987 இன் 3 ஆம் இலக்க சட்டத் தின் பிரகாரம் பதிவு சான்றிதழ் | 9.55 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடக்கு), தே.நீ.வ.வ.ச., யாழ்ப்பாண வீதி, வவுனியா.<br>தொலைபேசி: 024-2225719,<br>தொலைநகல்: 024-2225088 | 19/04/2017 14.00 மணி |
| முதலாம், இரண்டாம் மாடிகளில் பகுதிகளாகப் பிரித்தல் அல்லது பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் - வடக்கு<br>**ஒப்பந்த இல: RSC/N/P&D/RH/Partition/2017/07** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 18,000/- | கட்டிட கட்டுமான துறையில் c9 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு | 1.74 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடக்கு), தே.நீ.வ.வ.ச., யாழ்ப்பாண வீதி, வவுனியா.<br>தொலைபேசி: 024-2225719,<br>தொலைநகல்: 024-2225088 | 19/04/2017 14.00 மணி |
| நிகவெரடிய நீர் வழங்கல் திட்டத்தில் கோங்கஸ்தெனிய விரிவாக்கத்துக்கு uPVC/DI/GI குழாய்கள், பொருத்திகள், உதிரிப்பாகங்கள் மற்றும் வால்வுகளை பதித்தல்<br>**ஒப்பந்த இல: P&D(NW)/PL/CKD/NIKA/2017/37** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 130,000/- | நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையில் c8 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத் தில் பதிவு | 8.7 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வட மேற்கு) அலுவலகம், தே.நீ.வ.வ.ச., தம்புள்ளை வீதி, குருநாகல்<br>தொலைபேசி: 037-2221161,<br>தொலைநகல்: 037-2230086 | 19/04/2017 14.00 மணி |
| தனமல்வில நீர் வழங்கல் திட்டத்தில் சுத்திகரிப்பு நிலையத்தை புனரமைத்தல்<br>**ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(UVA)/REH/THANAMALWILA/2016/171** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 27,000/- | நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையில் c9 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத் தில் பதிவு | 1.8 மில்லியன் | கேள்விகள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., மெதிரிய வீதி, பதுளை.<br>தொலைபேசி: 0552230934,<br>தொலைநகல்: 0552230974 | 19/04/2017 14.00 மணி |
| மொனராகலையில் களஞ்சி கட்டிடம் அமைத்தல் மற்றும் பிராந்திய அலுவலகத்தை புனரமைத்தல்<br>**ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(UVA)/REH/MONARAGALA/2016/170** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 125,000/- | கட்டிட கட்டுமான துறையில் c7 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987 இன் 3 ஆம் இலக்க சட்டத் தின் பிரகாரம் பதிவு சான்றிதழ் | 8.3 மில்லியன் | கேள்விகள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., மெதிரிய வீதி, பதுளை.<br>தொலைபேசி: 0552230934,<br>தொலைநகல்: 0552230974 | 19/04/2017 14.00 மணி |
| கண்டகெடியவில் பலகொல்ல நீர் வழங்கல் திட்டங்களுக்கு DI/PVC Pipes குழாய்கள், பொருத்திகள் மற்றும் உதிரிப்பாகங்களை பதித்தல் மற்றும் தொடர்புடைய சிவில் வேலைகள்<br>**ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(UVA)/CB/CKD/BALAGOLLA-LAYING/2017/37** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 103,400/- | கட்டிட கட்டுமான துறையில் c7 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987 இன் 3 ஆம் இலக்க சட்டத் தின் பிரகாரம் பதிவு சான்றிதழ் | 6.9 மில்லியன் | கேள்விகள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., மெதிரிய வீதி, பதுளை.<br>தொலைபேசி: 0552230934,<br>தொலைநகல்: 0552230974 | 19/04/2017 14.00 மணி |
| புத்தல நீர் வழங்கல் திட்டத்தின் OIC அலுவலகத்தை முன்னேற்றல்<br>**ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(UVA)/REH/MONARAGALA/2017/23** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 144,000/- | கட்டிட கட்டுமான துறையில் c7 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987 இன் 3 ஆம் இலக்க சட்டத் தின் பிரகாரம் பதிவு சான்றிதழ் | 9.6 மில்லியன் | கேள்விகள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., மெதிரிய வீதி, பதுளை.<br>தொலைபேசி: 0552230934,<br>தொலைநகல்: 0552230974 | 19/04/2017 14.00 மணி |
| **இயந்திரம் மற்றும் மின்னியல் கேள்விகள்** | | | | | | |
| மாத்தறை பிராந்தியத்துக்கு தயார்நிலையில் வைக்கும் 03 ஜெனரேட்டர்கள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கி. பொருத்தி, பரிசோதித்து, ஆரம்பித்து வைத்தல்<br>**ஒப்பந்த இல: RSCS/P&C/S/GENERATOR/MATARA REGION/C.B./2016-129** | 12,500/- + பெ.சே. வரி | ரூபா. 144,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச்சான்றிதழ் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை.<br>தொ.பே: / தொ.நகல்: 011-2635885 | 26/04/2017 10.00 மணி |
| பொத்துவில் நீர் வழங்கல் திட்டத்தில் பிரதான ஓயா உள்ளீர்ப்பு கிணற்றுக்கு குழாய் துறை பம்பியை வழங்கி, பொருத்தல்<br>**ஒப்பந்த இல: RSC(E)/AGM (ES)/BHP/TB/HED-PVL/2016/53** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 55,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | உதவி பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், தே.நீ.வ.வ.ச., ஸ்ரீ தம்மரத்ன மாவத்தை, அம்பாறை.<br>தொலைபேசி: 063-2223926,<br>தொலைநகல்: 063-2224975 | 20/04/2017 10.00 மணி |
| தொடங்கஸ்லந்த நீர் வழங்கல் திட்டத்துக்கு நீர்மூழ்கி குழாய் துளை வகை பம்பி மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கி, பொருத்தல்<br>**ஒப்பந்த இல: O&M/NW/P/DROUGHT/DODAN/2017/41** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 16,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வட மேற்கு) அலுவலகம், தே.நீ.வ.வ.ச., தம்புள்ளை வீதி, குருநாகல்<br>தொலைபேசி: 037-2221161,<br>தொலைநகல்: 037-2230086 | 19/04/2017 14.00 மணி |
| குருநாகல்/புத்தளம் மாவட்டங்களில் உள்ள நீர் வழங்கல் திட்டங்களுக்கு குழாய் துளை வகை நீர்மூழ்கி பம்பி தொகுதிகளை வழங்கி, விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல: O&M(NW)/P/DROUGHT/OGO-WARI-KK-NATH-MEEOYA/2017/42** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 30,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வட மேற்கு) அலுவலகம், தே.நீ.வ.வ.ச., தம்புள்ளை வீதி, குருநாகல்<br>தொலைபேசி: 037-2221161,<br>தொலைநகல்: 037-2230086 | 19/04/2017 14.00 மணி |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்தல்** | | | | | | |
| பாரிய கண்டி நீர் சுத்திகரிப்பு நிலையத்து வேன் வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC-C/KN/SER/O&M/G.K.W.T.P./2017/77** | 2000/- + பெ.சே. வரி | ரூபா. 12,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்திய) கெடம்பே, பேராதனை<br>தொலைபேசி: 081-2386068,<br>தொலைநகல்: 081-2388027 | 19/04/2017 14.00 மணி |
| கராகொட – உயன்கொட நீர் வழங்கல் திட்டத்துக்கு Crew Cab வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC(S)/P&C/K'GODA-U'GODA/HIRING/CREW CAB/O&M/**2017-75 | 500/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>தொலைபேசி: 041-2229792,<br>தொலைநகல்: 041-2224769 | 19/04/2017 14.00 மணி |
| பிராந்திய ஒத்துழைப்பு நிலைய (மேற்கு / தெற்கு) அலுவலகத்தின் கட்டுமான பிரிவுக்கு 3CX பெகோ ஏற்றி ஒன்றை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC(W/N)/HIRING/CONS.(REC)/2017/09** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 6,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல் வடக்கு) அலுவலகம், இல. 433/4 A, கனேமுல்ல வீதி, கடவத்தை<br>தொலைபேசி: 0112922129,<br>தொலைநகல்: 0112922146 | 19/04/2017 14.00 மணி |
| தெதுரு ஓயா நீர் வழங்கல் திட்டத்தின் செயற்றிட்ட பணிப்பாளருக்கு கார் ஒன்றை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: E&M(NW)/HV/PROJECT/DOWSP/2017/46** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 19,500/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வட மேற்கு) அலுவலகம், தே.நீ.வ.வ.ச., தம்புள்ளை வீதி, குருநாகல்<br>தொலைபேசி: 037-2221161,<br>தொலைநகல்: 037-2230086 | 19/04/2017 14.00 மணி |
| பிராந்திய ஒத்துழைப்பு நிலைய (மேற்கு – தெற்கு) அலுவலகம் மற்றும் (பண்டாரகம) பிராந்திய பொறியியலாளருக்கு 02 வேன்கள் வாடகைக்கு அமர்த்தல் மற்றும் OIC (பாணந்துறை), OIC (ஹொரனை), OIC (வாத்துவ), OIC (கும்புக) ஆகியவற்றுக்கு 04 Crew Cabs அல்லது Double Cabs அல்லது வாகனங்களை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: W-S/ P&C/H(03)/ DGM/O&M/2017/30** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | தொடர்புடைய வாகன உரிமையாளர்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல் தெற்கு), தே.நீ.வ.வ.ச., இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, அங்குலான, மொரட்டுவை<br>தொலைபேசி: 0112224888,<br>தொலைநகல்: 0112637945 | 18/04/2017 10.00 மணி |
| **மானி வாசித்தல்** | | | | | | |
| மானி வாசித்தல், மாதாந்த ரசீது தயாரித்தல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு விநியோகித்தல் - மாத்தளை நீர் வழங்கல் திட்டம்<br>**ஒப்பந்த இல: RSC-C/KN/SERVICE/O&M/MATALE/M.R./2017/05** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 19,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்திய) கெடம்பே, பேராதனை<br>தொலைபேசி: 081-2386068,<br>தொலைநகல்: 081-2388027 | 19/04/2017 14.00 மணி |
| **பயிற்றுவிக்கப்படாத வேலையாட்கள்** | | | | | | |
| பிடிகல நீர் வழங்கல் திட்டத்தின் பராமரிப்பு வேலைக்கான பயிற்றுவிக்கப்படாத வேலையாட் சேவைகளை வழங்கல்<br>**ஒப்பந்த இல: RSC(S)/P&C/LAB/PITIGALA/O&M/2017-77** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 22,000/- | பயிற்றுவிக்கப்படாத வேலையாட் சேவைகளை வழங்குவதில் இரண்டு வருட அனுபவம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>தொலைபேசி: 041-2229792,<br>தொலைநகல்: 041-2224769 | 19/04/2017 14.00 மணி |
| **கட்டிடங்களை வாடகைக்கு பெறல்** | | | | | | |
| நீர்கொழும்பு விநியோக அலுவலகத்துக்கு காணியுடன்கூடிய கட்டிடமொன்றை வாடகைக்கு பெறல்<br>**ஒப்பந்த இல: RSC(W/N)/RENT/GAM(O&M)/2017/15** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 18,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல் வடக்கு) அலுவலகம், இல. 433/4 A, கனேமுல்ல வீதி, கடவத்தை<br>தொலைபேசி: 0112922129,<br>தொலைநகல்: 0112922146 | 19/04/2017 14.00 மணி |
| நீர்கொழும்பு பகுதி பொறியியலாளர் அலுவலகத்துக்கு கட்டிடமொன்றை வாடகைக்கு பெறல்<br>**ஒப்பந்த இல: RSC(W/N)/RENT/GAM(O&M)/2017/14** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 16,200/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல் வடக்கு) அலுவலகம், இல. 433/4 A, கனேமுல்ல வீதி, கடவத்தை<br>தொலைபேசி: 0112922129,<br>தொலைநகல்: 0112922146 | 19/04/2017 14.00 மணி |

| ஸ்தல அமைப்பு மதிப்பீட்டு வேலை | | | | | |
|---|---|---|---|---|---|
| பண்டாரவளை, தியத்தலாவ, ஹபுதளை ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டத்தின் விநியோக முறைக்கான ஸ்தல அமைப்பு பற்றிய அளவிடும் வேலை **ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(U)/RECH/BANDARAWELA/2017/72** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 45,000/- | பதிவு செய்யப்பட்ட அனுமதிபத்திரமுடைய அளவையியலாளர்கள் | கேள்விகள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., மெதிரிய வீதி, பதுளை. தொலைபேசி: 0552230934, தொலைநகல்: 0552230974 | 19/04/2017 14.00 மணி |

தகுதித்தன்மைக்கான சான்றுகளுடன் வியாபாரக் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும். மற்றும் **இறுதித் திகதிக்கு முன்னைய நாள்** வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் இடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

கேள்விகள் மூடப்பட்டவுடனேயே சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். **தாமதமாக விலைமனு சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.**

**தவிசாளர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்**






இரத்தினபுரி பர்கஸன் உயர் பாடசாலையின் நூற்றாண்டு விழா நேற்று முன்தினம் அதிபர் மேர்ஸி கலகம தலைமையில் இடம்பெற்றது.இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாக கலந்துகொண்டபோது பிடிக்கப்பட்ட முக்கிய படங்கள். (இரத்தினபுரி எம்.எல்.எஸ்.முஹம்மத்)

## ஐரோப்பிய நிதியுதவியில் மொரவெவவில் மருத்துவ முகாம்

**(திருகோணமலை அப்துல்சலாம் யாசீம்)**

ஐரோப்பிய நிதியுதவியுடன் திருகோணமலை மாவட்டத்தில் வாழ்கின்ற விஷேட தேவையுடைய சிறுவர்கள் பெரியவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கும் இலவச வைத்திய சேவைகள் வழங்கப்படும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியத்தின் சிவில் சமூக அமைப்புக்கான Together Project சிறுவர் நிதியத்தின் உதவியுடன் நேற்று (28) சிறுவர் அபிவிருத்தி நிதியத்தினால் இலவச மருத்துவ முகாம் மொறவெவ பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

சிறுவர் அபிவிருத்தி நிதியமானது விஷேட தேவையுடைய சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்கான மருத்துவ முகாமினை ஒழுங்குபடுத்துவதுடன் அவர்களின் மருத்துவ ரீதியிலான பிரச்சினைகளை சரியாகக் கண்டறிவதற்கு உதவுவதுடன் சரியான சுகாதார சேவைகளை பெற வழி வகுத்தலுமே இதன் நோக்கமாகும் என சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் திருகோணமலை முகாமையாளர் கே.வினோபவன் தெரிவித்தார்.

அத்துடன் இலவச வைத்திய சேவையில் விஷேட வைத்திய நிபுணர்களால் விஷேட தேவையுடையவர்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் முகாமையாளர் கே.வினோபவன் தெரிவித்தார்.

இந்நிகழ்விற்கு சமூக சேவைகள் திணைக்களம்,பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் ,திருகோணமலை பொது வைத்தியசாலை உயரதிகாரிகள்,மொறவெவ பிரதேச செயலக அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிண்ணியா வைத்தியசாலையை தரமுயர்த்த கவனயீர்ப்பு போராட்டம்




**(கிண்ணியா நிருபர்)**

கிண்ணியா தள வைத்தியசாலையை தரம் உயர்த்துமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டமொன்றை கிண்ணியா பொது நல அமைப்புகள் இணைந்து நேற்று (28) கிண்ணியா பழைய வைத்தியசாலைக்கு முன்னால் நடத்தினர்.

கிண்ணியா வைத்தியசாலையை ஏ தரத்திற்கு தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். குறைந்தது 20 தாதியர்கள் நியமிக்கப் பட வேண்டும்.வைத்தியர் நிபுணர்களான வி.பி,சிறுவர் நல வைத்தியர் நியமிக்கப் பட வேண்டும். தற்போது கடமையாற்றி வரும் ஸ்ரீதனை இடமாற்றம் செய்யப் பட வேண்டும். உடனடியாக icu வாட் நிறுவப் பட வேண்டும். கட்சிகளை மறந்து அரசியல் தலைவர்கள் இச்சந்தர்ப்பத்தில் ஒன்று படவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இக் கவனயீர்ப்பு போராட்டத்தை செய்தனர்.

நல்லாட்சியே எமது வைத்தியசாலைக்கு உயிர் கொடு,கிண்ணியா தாயின் தாகம் தீர்க்கும் தருணம் 13 உயிர்களை இழந்து விட்டோம்.உயிருக்கு உத்தர வாதமில்லை,தகுதிக்கு தரம் கொடுத்து எமது தள வைத்தியசாலையை தரமுயர்த்து, உயிருக்கு உத்தரவாதமில்லை ஆகிய சுலோகங்களை ஏந்தியவாறு இவ்வமைப்பினர் இக் கவனயீர்ப்பு போராட்டதை முன்னேடுத்தனர். இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர் கருத்து தெரிவிக்கையில் டெங்கினால் பல உயிர்களை இழந்தோம்.மேலும் உயிர்களை இழக்க விட மாட்டோம்.எனவே இவ்வைத்தியசாலையை தரம் உயர்த்தி தரும் வரை எமது இந்த போராட்டமானது தொடரும் என்றார்.





இலங்கைக்கு விஜயம் செய்த ஓமான் நாட்டின் வான்படைத்தளபதி நாசர் ஜும்மா மொஹம்மட் அல் ஸட்ஜலிக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட பணிப்பாளர் சி.ஏ.எச்.எம். விஜேரத்ன,பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாரச்சி ஆகியோர் நினைவுச்சின்னம் வழங்கி வைப்பதனையும் கடற்படைத் தலைமையகத்துக்கு விஜயம் செய்தபோதும் எடுக்கப்பட்ட படங்கள்.

## கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகாவில் 02 மாணவிகளுக்கு 9 ஏ சித்தி




கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா வித்தியாலயம் கல்விப் பொதுத்தராதரப்பரீட்சையில் அதிசிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொண்டுள்ளது. 27 மாணவர்கள் பரீட்சைக்குத்தோற்றி அதில் 20 மாணவர்கள் கணித பாட சித்தியுடன் க.பொ.த உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். மாணவிகளான எம்.ஏ.எப் பஹ்ஜாத், ஏ.எப். இஷ்காஆகியோர் 9 ஏ சித்திகளும் மாணவி எம்.ஜே. இல்மா,6 ஏ,பி.சி, சித்தியையும் பெற்றுக்கொண்டதோடு மாணவி எம்.ஜே.ஜெஸ்லா 8 ஏ,பி. சித்திகளையும் பெற்றனர்.

மாணவிகளின் வெற்றியானது பாடசாலைக்கு பெருமையை ஈட்டித்தரக்கூடிய விடயமாக அமைவதோடு பாடசாலையின் எதிர்கால வளர்ச்சிக்கு ஒரு திருப்பு முனையாகவும் அமைந்துள்ளது என அதிபர் எஸ்.ஏ. இஸ்மத் பாத்திமா தெரிவித்தார். இந்த வெற்றிக்கு பாடசாலையின் அதிபர் எஸ்.ஏ. இஸ்மத் பாத்திமா, ஆசிரியர் குழாமும் பெற்றோர்களும் நலன் விரும்பிகளும் முக்கிய காரணிகளாகும் எனவுத் தெரிவித்தார். அத்துடன் பாடசாலைக்கு திடீர் விஜயத்தை மெற்கொண்ட அத்தனகல்ல கோட்டக்கல்விப்பணிப்பாளர் ஜி.டி.ஏ. குலதுங்க பாடசாலை மாணவர்களையும் நிர்வாகத்தையும் ஆசிரியர்களின் அயராத பணியையும் வாழ்த்தியதோடு அத்தனகல்லை கோட்டத்தில் சாதாரண தரப்பரீட்சையில் இரண்டாம் இடத்தை இப்பாடசாலை பெற்றுள்ளமை பற்றியும் அதிபரிடம் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

அத்தனகல்லக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஜி.டி.ஏ. குலதுங்க பாடசாலை அதிபர் எஸ்.எ.இஸ்மத் பாத்திமா, சிறந்த சித்திகளை எய்திய மாணவர்களையும் பாடசாலையின் பிரதி அதிபர்கள், மாணவர்களையும் படத்தில் காணலாம்.

## போராட்டத்துக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வில்பத்து வன சரணாலயத்திற்கு வடக்கே அமைந்துள்ள வனப்பாதுகாப்புத்திணைக்களத்துக்குச் சொந்தமான பிரதேசதங்களை உள்வாங்கி பாதுகாப்பட்ட வனம் என அந்தப்பிரதேசத்தை ஜனாதிபதி பிரகடனப்படுத்தியதனால் முசலிப்பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட சுமார் 10 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தப்பிரதேசமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஜனாதிபதி தனது பிரகடனத்தை இரத்துச் செய்யவேண்டுமென முசலிப்பிரதேசத்தன் பல்வேறு அமைப்புக்கள் கையெழுத்திட்டு ஜனாதிபதிக்கு அவசரக் கடிதமொன்றினையும் அனுப்பி வைத்துள்ளனர்.

பள்ளிபரிபாலனசபைகள், விவசாய அமைப்புக்கள், கிராமஅபிவிருத்திசங்கங்கள், மாதர்சங்கங்கள், விளையாட்டுக்கழகங்கள் உள்ளிட்ட இன்னும் பல்வேறு பொதுநலஅமைப்புக்கள் கையெழுத்திட்டு ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதாகவும், அதன் பிரதி முசலிப்பிரதேசசெயலாளரிடம் கையளித்துள்ளதாகவும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். அத்துடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின்தலைவரும் அமைச்சருமான றிஷாத்பதியுதீனை அனைத்துப்பள்ளிவாசல் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் உட்பட மக்கள் சார்ந்த அமைப்புக்கள் கொழும்பில் சந்தித்து தற்போது ஏற்பட்டுள்ள நிலமைகளைத் தெரிவித்தனர்.

கடந்த 13.03.2017ஆம் திகதி கையெழுத்திடப்பட்டு முசலிப்பிரதேசசெயலகத்தினால் முசலிப்பிரதேசத்திலுள்ள அனைத்துப்பள்ளிவாசலுக்கும் இவ்விடயம் குறித்து கடிதமொன்று ஒப்படைக்கப்பட்டதாகவும் அக்கடிதத்தின்படி அன்றையதினத்திலிருந்துஇரண்டு வாரங்களுக்குள் இவ்வாறு குறிப்பிட்டபிரதேசங்கள் காடுகளுக்குச் சொந்தமாக்குவதில் உங்களுக்கு ஏதாவதுள திர்ப்புக்கள், ஆட்சேபனைகள் இருப்பின் தெரிவிக்குமாறும் கூறப்பட்டிருந்தது.

அந்தக் குறிப்பிட்ட திகதியிலிருந்து 2 வாரம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் ஜனாதிபதி அக்கால அவகாசத்திற்கு முன்னரே இந்த வர்த்தமானி அறிவித்தலில் கையொப்பம் இட்டுள்ளமை ஏனோ என்று தமக்கு விளங்கவில்லை எனவும் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

மாவில்லு, வெப்பல், மறிச்சுக்கட்டி, விலாத்திக்குளம், பெறியமுறிப்பு ஆகிய பாதுகாக்கப்பட்டவனங்கள் இணைக்கப்பட்டே வனப்பாதுகாப்புக்கட்டளைச் சட்டத்தின் 3 ஆ பிரிவின் கீழ் மாவில்லு பாதுகாக்கப்பட்ட வனம்எனவர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார்.

முசலிப்பிரதேசத்தின் எல்லைக்குட்பட்ட 28 கிராமங்களில் 10 கிராமங்களுக்கு இந்த அறிவித்தல் மூலம் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கவலைதெரிவித்துள்ள இந்தபிரதேசமக்கள் தங்களுக்குச் சொந்தமான பரம்பரைக்குடியிருப்புக்காணிகளும் மேய்ச்சல்தரைகளும், விவசாயநிலங்களும் இந்தப்பிரகடனத்தின் மூலம் உள்வாங்கப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டுகின்றனர்.

நல்லாட்சியைக் கொண்டுவருவதில் ஒட்டு மொத்த பங்களிப்புச்செய்த முசலி மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து கவனயிர்ப்புப்போராட்டங்கள், எதிர்ப்புப்பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், மற்றும் மறியல்போராட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் சமூகநல அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

நாடளாவிய ரீதியில் தமது போராட்டங்களை முன்னெடுத்துச் சென்று நீதிகோருவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளதாகக் கூறும் மக்கள் நலன்சார் அமைப்புக்கள், சர்வதேசத்தின் கவனத்திற்கு இதனைக்கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

"1990 ஆம் ஆண்டு இந்தப்பிரதேசத்திலிருந்துவெளியேற்றப்பட்ட நாங்கள் சுமார் 25 வருட அகதி வாழ்வின் பின்னர் மீண்டும் சொந்தப்பிரதேசங்களுக்குச்சென்று நிம்மதியாகவாழமுற்படும்போதுமரத்தால்விழுந்தவனைமாடேறிமிதித்ததுபோன்றுமீண்டும் தமக்கு அநியாயம் செய்யபடுவதாக வேதனைப்பட்டனர்?? அகதியாக வாழ்ந்த காலத்தில் தமதுகாணிகளில் அநேகம் இராணுவத்தினராலும் போராட்டக்குழுக்களினாலும் ஆக்கிரமிக்கப்பட்டு மாற்றார் குடியிருக்கின்றனர். விவசாய நிலங்களில் இராணுவம் நிலைகொண்டுள்ளது. அத்துடன் 2012 ஆம் ஆண்டு வனபரிபாலனத்திணைக்களம் எமக்குச் சொந்தமான காணிகளை கொழும்பில் இருந்து கொண்டு ஜிபிஎஸ் முறையைப்பயன்படுத்தி தமக்கு உரித்தான காணிகளாக பிரகடனப்படுத்தியது. அத்துடன் எஞ்சியிருக்கும் எமதுகாணிகளில் நாங்கள் குடியேறுவதற்காக அதனைத் துப்பரவு செய்யும் வேளையில் காடுகளை வெட்டுவதாக இனவாதிகளும், இனவாதஊடகங்களும் பொய்ப்பிரசாங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜனாதிபதிக்கும் தவறான தகவல்களை வழங்கிபிழையான வர்த்தமானி பிரகடனத்தை வெளியிடுவதற்கு உந்துகோலாக இருந்ததாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# ஈரானுக்கு ஐ.எஸ். கொலை மிரட்டல்



ஈரானுக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினர் கொலை மிரட்டல் வீடியோ ஒன்றினை அனுப்பியுள்ளனர்.

ஈரானில் ஷியா முஸ்லிம்கள் அதிகளவில் காணப்படுகிறனர். சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ், அமைப்பினர் சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாடிக்குள் வைத்துள்ளனர்.

இந்நிலையில், ஈரானுக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினர் கொலை மிரட்டல் வீடியோ ஒன்றினை அனுப்பியுள்ளனர்.

அது 36 நிமிட வீடியோ. அதற்கு, த பார்சி லேண்ட் நேற்று முதல் இன்று வரை என்று தலைப்பு இருந்தது. ஈராக் அருகில் தியாலா மாகாணத்திலுள்ள ஐ.எஸ். அமைப்பின் சமூக ஊடகம் மூலம் இந்த வீடியோ வெளியிடப்பட்டது.

வீடியோவில் முகமூடி அணிந்த மனிதன் ஒருவர் ஈரான் தலைவர் ஆயதுல்ல அலி கமெனிய்க்கு இந்த மிரட்டல் செய்தியை தெரிவித்துள்ளார்.

வீடியோவில் மேலும் சிலர் கரம்கோர்த்து இருந்தனர். அதில் ஒருவர் யா ஹோசியன் பேஜ் அணிந்திருந்தான். அது ஷியா போராளி என்பதை வெளிப்படுத்துகிறது.

# மொசூலில் பயங்கரவாதிகளுக்கு எதிராக இராணுவத்தினர் மீண்டும் தாக்குதல்



ஈராக்கின் மொசூல் நகரை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கும் தாக்குதல் நடவடிக்கைகளை அந்நாட்டு இராணுவம் மீண்டும் தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இராணுவ செய்தித் தொடர்பாளர் ஷகீர் ஜாவ்தத் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மொசூலின் பழைய நகரப் பகுதியில் இராணுவத்தினரும் அதிரடிப் படையினரும் மீண்டும் தங்கள் தாக்குதலை திங்கட்கிழமை தொடங்கினர். குறுகலான தெருக்களில் நெருக்கமாக அமைந்துள்ள குடியிருப்புகளில் பயங்கரவாதிகள் மறைந்திருந்து இராணுவத்தினரைத் தாக்கி வருகின்றனர். அப்பாவிப் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படாத வகையில் இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அல்-நூரி பள்ளிவாசலுக்கு அருகேயுள்ள பருக் தெருவைக் கைப்பற்றுவது இராணுவத்தின் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்றாகும். இதனிடையே பொதுமக்கள் உயிரிழக்கும் வகையில் இராணுவத் தாக்குதல் அமைந்தது என்பது குறித்த விசாரணை நடைபெற்று வருகிறது என்றார் அவர்.

குடியிருப்புகளில் பொதுமக்களை மனிதக் கேடயமாக நிறுத்தி பயங்கரவாதிகள் தாக்கி வருகின்றனர். பதில் தாக்குதல் நிகழ்த்தினால் பொதுமக்கள் உயிரிழக்கும் அபாயமுள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றிய அரசு கட்டடங்களில் ஏராளமான பொதுமக்களை நிறுத்தியதாகத் தெரிய வந்துள்ளது. தீவிரவாதிகளின் நிலைகள் என்று முன்னர் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் வான்வழித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இதைத் தொடர்ந்து மொசூல் நகரில் ஏராளமான அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்ததாகத் தகவல் வெளியானது.

தகர்ந்த கட்டடங்களிலிருந்து பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட ஏராளமான உடல்கள் மீட்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அப்பாவிப் பொதுமக்கள் மனிதக் கேடயமாகப் பயன்படுத்தப்பட்டது இதன் மூலம் உறுதியாகியுள்ளது.

சுமார் 700 பேர் வரை பலியாகியிருக்கக் கூடும் என்ற அதிர்ச்சியூட்டும் தகவலையடுத்து பாதுகாப்புப் படையினரின் தாக்குதல் நடவடிக்கை தற்காலிமாக நிறுத்தப்பட்டது. எனினும், தற்போது வீதிகளில் பாதுகாப்புப் படை வாகனங்கள் சிறிது சிறிதாக முன்னேறி வருகின்றன என்று மேற்கத்தேய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உலகச் செய்திகள்

# தேர்தல் வெற்றிக்காக மோடிக்கு டிரம்ப் வாழ்த்து



(திருச்சி சாஹுல் ஹமீது)

உத்தரப் பிரதேச மாநில தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றமைக்கு இந்திய பிரதமர் மோடிக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட டிரம்ப், தேர்தல் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளதாக வெள்ளை மாளிகை வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவிக்கபட்டுள்ளது. உரையாடலின் போது இரு நாட்டு தலைவர்களும் தெற்காசியா மற்றும் மத்திய ஆசியா நாடுகளின் அரசியல் சூழல் பற்றி விரிவாக விவாதித்ததாகவும் தெரிகிறது.

சர்வதேச அளவில் தீவிரவாதத்துக்கு எதிராக போராட அமெரிக்காவுடன் இந்தியா உள்ளிட்ட நாடுகள் கைகோர்த்து செயற்பட வேண்டுமென்று அப்போது டிரம்ப் கேட்டுக்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தொலைபேசி உரையாடல் தொடர்பான முழுமையான தகவல்கள் வெளியிடப்படவில்லை. டொனால்ட் டிரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் மோடியுடன் 3ஆவது முறையாக தொலைபேசி மூலம் ஆலோசித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெற்காசியாவுக்கு தனி தலைமை: அல் - கைதா புதிய திட்டம்



தெற்காசியாவில் நிலைத்திருப்பதை உறுதிப்படுத்தும் வகையில், அந்தப் பகுதிக்கென பிரத்யேக உள்ளூர் தலைமையை உருவாக்கும் நடவடிக்கைகளில் அல்-கைதா அமைப்பு ஈடுபட்டு வருவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:-

ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் தங்களது செல்வாக்கு வேகமாகக் குறைந்து வருவதை அல்-கைதா அமைப்பின் தலைமை நன்கு உணர்ந்துள்ளது.

எனவே, முற்றிலும் உள்ளூர் அடையாளத்துடன் தனது கிளை அமைப்பை அந்தப் பகுதிகளில் தொடங்கி, உள்ளூர் தலைமையை நியமிக்க அல்-கைதா அமைப்பினர் திட்டமிட்டுள்ளனர்.

இதன்மூலம், எகிப்தியர்கள் உள்ளிட்ட அன்னியர்களின் தலைமையை ஏற்க விரும்பாத அல்- கைதா, உள்ளூர் தலைமையை ஏற்று, தொடர்ந்து தங்களுடன் இருப்பார்கள் என்று அந்த அமைப்பு கணக்குப் போடுகின்றது.

இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளவே இந்தியத் துணைக் கண்டத்துக்கான அல் - கைதா என்ற தனி அமைப்பு தொடங்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் மட்டுமன்றி, பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட தெற்காசியப் பிராந்தியம் முழுவதிலும் அல் - கைதா நிலைத்திருப்பதை உறுதி செய்யவே, அந்தப் புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட சில தேடுதல் வேட்டைகளின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்களிலிருந்து, சிரியாவில் இயங்கி வரும் அல் - கைதாஅமைப்புடன் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்குத் தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்தியத் துணைக் கண்டத்துக்கான அல்-கைதா அமைப்பைத் தொடங்கியுள்ளதாக அல்- கைதா தலைவர் அய்மான் அல்-ஜவாஹிரி கடந்த 2014ஆம் ஆண்டு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆழ்கடலில் டைட்டானிக் கப்பலை சுற்றிப் பார்க்கலாம்

## ஏற்பாடு செய்கிறது லண்டன் நிறுவனம்



105 ஆண்டுகளுக்கு முன்னர் கடலுக்குள் மூழ்கிய டைட்டானிக் கப்பலின் உடைந்த பகுதிகளை நேரில் சுற்றிப் பார்ப்பதற்கான வாய்ப்பை, தனியார் நிறுவனமொன்று வழங்கவிருக்கிறது.

புளூ மார்பின் என்ற பிரித்தானிய நிறுவனம், பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஆழ்கடல் கலத்தின் உதவியுடன் அட்லாண்டிக் பெருங்கடலில் 4,000 மீற்றர் ஆழத்தில் தரை தட்டியிருக்கும் டைட்டானிக் கப்பலை தனது வாடிக்கையாளர்களுக்கு அடுத்த ஆண்டு மே மாதம் சுற்றிக் காட்டவுள்ளது.

இந்தக் கடலடி சுற்றுலாவுக்கான கட்டணம் 1.05 இலட்சம் டொலர் என்றாலும், முதல் பயணத்துக்கான அனைத்து இருக்கைகளும் ஏற்கெனவே முன்பதிவு செய்யப்பட்டுவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

டைட்டானிக் கப்பலில் முதல் வகுப்புப் பயணக் கட்டணமான 4,350 டொலரின் தற்போதைய மதிப்பையே கடலடிச் சுற்றுப் பயணத்துக்கான கட்டணமாக நிர்ணயித்துள்ளதாக அந்த சுற்றுலா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த 8 நாட்கள் சுற்றுப் பயணம் கனடா கரையிலிருந்து புறப்படும். ஆழ்கடலில் இறங்கி, டைட்டானிக் கப்பலைக் கண்டு, மீண்டும் மேலே வர 3 மணி நேரமாகும்.

'ஆர்.எம்.எஸ் டைட்டானிக்' பிரிட்டனிலிருந்து அமெரிக்காவின் நியூயோர்க் நகரை நோக்கி 2,224 பேருடன் கடந்த 1912 ஆம் ஆண்டு தனது முதல் பயணத்தை மேற்கொண்டது.

பயணத்தின் நான்காவது நாளிலேயே அந்தக் கப்பல் பனிப்பாறை மீது மோதி வடக்கு அட்லாண்டிக் கடலில் மூழ்கியது. இந்த விபத்தில் 1,500இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து, நவீன கடல் பயண வரலாற்றில் மிக மோசமான விபத்துகளில் ஒன்று என்று தெரிவிக்கப்படுகிறது.



லண்டனில் மேற்கொள்ளப்பட்ட தீவிரவாத தாக்குதலை கண்டித்து லண்டன் நகர முஸ்லிம் பெண்கள் மிகப்பெரிய மனித சங்கிலி போராட்டத்தில் ஈடுபட்டனர். இத் தீவிரவாத தாக்குதலுடன் தொடர்புடைய மேலுமொருவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய அரசுக்கு எதிராக போராட்டம்:

# கைதான எதிர்க்கட்சி தலைவருக்கு 15 நாள் சிறை



ரஷ்யாவில் அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னிக்கு 15 நாட்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் ஊழல் மலிந்து விட்டதால், பிரதமர் பதவியிலிருந்து டிமிட்ரி மெத்வதேவ் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி எதிர்க்கட்சி சார்பில் ஞாயிற்றுக்கிழமை போராட்டம் நடைபெற்றது.

தலைநகர் மாஸ்கோவில் நடந்த போராட்டத்துக்கு எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னி தலைமை தாங்கினார். போராட்டங்களில் ஏராளமானோர் திரளாக கலந்து கொண்டனர்.

கடந்த 5 ஆண்டுகளில் இல்லாதளவிற்கு பெரிய அளவிலான போராட்டமாக இது இருந்தது. இதனையடுத்து அலெக்சிநவால்னி உட்பட போராட்டத்தில் ஈடுபட்ட 1000 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு கைதான அலெக்சி நவால்னி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு 15 நாட்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தான் போராட்டத்தை கைவிடப்போவதில்லை என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# ஜெர்மன் அருங்காட்சியகத்தில் 100Kg தங்க நாணயம் கொள்ளை




ஜெர்மன் அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த சுமார் 100 கிலோ எடையுள்ள தங்க நாணயம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெர்மனி தலைநகர் பெர்லினிலுள்ள அருங்காட்சியகத்தில் வைத்தே ஞாயிறன்று இரவு இந்த தங்க நாணயம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. அதன் மதிப்பு 4 மில்லியன் டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கொள்ளை போன நாணயம் கனடா அரசால் கடந்த 2007ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. 'பெரிய பனை ஓலை'என பெயரிடப்பட்டிருந்தது.

அதில் ராணி 2ஆம் எலிசபெத்தின் உருவப்படம் பொறிக்கப்பட்டிருந்தது. சுத்த தங்கத்தால் இது உருவாக்கப்பட்டிருந்தது. எனவே இது கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

53 செ.மீ. நீளமும், 3 செ.மீ. பருமனும் கொண்டது இந்நாணயம், 'புல்லட் புரூப்' கண்ணாடி பெட்டிக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது.

அருங்காட்சியகத்தின் ஜன்னலை உடைத்து ஏணி மூலம் கொள்ளையர்கள் உள்ளே நுழைந்து, பின்னர் அங்கிருந்த தங்க நாணயத்தை கொள்ளையடித்து சென்றுள்ளனர். இது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த அருங்காட்சியகத்தில் உலக நாடுகளின் நாணயங்கள் சேகரித்து பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இங்கு 5 இலட்சத்து 40 ஆயிரம் வகை நாணயங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கென்ய படைகள் தாக்குதல்; அல் ஷபாப் இயக்கத்தின் 31 பேர் பலி

சோமாலியாவில் கென்ய படைகள் நடத்திய தாக்குதலில் அல் ஷபாப் இயக்கத்தைச் சேர்ந்த 31 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து கென்ய இராணுவம் வெளியிட்ட அறிக்கையில்,

சோமாலியாவின் பதாதி மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை கென்ய படைகள் ஹெலிகொப்டர்கள் மற்றும் பீரங்கியைக் கொண்டு தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் அல் ஷபாப் இயக்கத்தைச் சேர்ந்த 31பேர் கொல்லப்பட்டனர் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் கென்ய அரசின் இந்தத் தாக்குதல் குறித்து அல் ஷபாப் அமைப்பு கருத்து தெரிவிக்க மறுத்து விட்டது. கென்யா மீதான அல் ஷபாப் அமைப்பின் தொடர் தாக்குதல் காரணமாக 2011ஆம் ஆண்டு கென்யா தனது படைகளை சோமாலியாவுக்கு அனுப்பி தாக்குதல் நடத்தி வருவது. கென்யா, சோமாலியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளில் தொடர்ந்து சதி செயல்களில் ஈடுபட்டு வரும் அல் ஷபாப் அமைப்பு அல் - கைதா இயக்கத்தின் கிளை அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

7 யூனிசெப் பணியாளர்கள் பலி:

ஆபிரிக்க நாடான சூடானில் நடக்கும் உள்நாட்டு போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் திங்கட்கிழமை கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் யூனிசெப் அமைப்பின் உதவி பணியாளர்கள் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

# புதிய வில்பத்து...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தலைவரும் கைத்தொழில் வணிக அமைச்சருமான றிஷாத் பதியுதீன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று வில்பத்து சரணாலயத்துக்கு வடக்கே அமைந்துள்ள நான்கு பிரதேசங்களை உள்ளடக்கிய பாதுகாக்கப்பட்ட வனமாகப் பிடகடனப்படுத்தப்பட்டிருப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்தே அமைச்சர் ஜனாதிபதிக்கு இக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது அமைச்சர் ஜனாதிபதியின் புதிய தீர்மானம் குறித்து ஆட்சேபனை தெரிவித்ததாக அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் கூறியிருப்பதாவது,

வில்பத்துத் தொடர்பான புதிய வர்த்தமானி அறிவித்தல், முசலிப் பிரதேச மக்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதால் அதனை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் றிஷாத் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

கால் நூற்றாண்டு கால அகதி வாழ்வில் பல்வேறு துன்பங்களை அனுபவித்து விட்டு, மீண்டும் கஷ்டங்களின் மத்தியிலே தமது பூர்வீகக்காணிகளில் குடியேறியிருக்கும் முசலிப் பிரதேச மக்களுக்கு புதிய வர்த்தமானி அறிவித்தலால் அவர்களது சுயாதீனமான இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அந்த மக்களுக்குச் சொந்தமான விவசாயக் காணிகளும், மேய்ச்சல் தரை நிலங்களும், குடியிருப்புக்காணிகளில் ஒரு பகுதியும் பாதுகாக்கப்பட்ட வனத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளமை பிழையானதென அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் இனவாத நடவடிக்கையினாலேயே தங்களின் தலைமையிலான புதிய அரசாங்கத்தை கொண்டு வருவதற்கு முஸ்லிம்கள் முழுப்பங்களிப்பையும் நல்கினர்..

ஆட்சி மாற்றத்தை வேண்டி தங்களது உயிரையும் துச்சமென மதித்து எதையுமே பொருட்படுத்தாது முன்னின்று உழைத்த இந்த முஸ்லிம் சமூகத்தை இனவாதிகள் தொடர்ந்தும் கொடுமைப் படுத்துவதற்கு இந்த அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது.

முஸ்லிம் சமூகத்தை காடழிக்கும் சமூகமாகக் காட்டி இனவாதிகள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் பிழையான நடவடிக்கைகளுக்கு உத்வேகம் கொடுக்கும் வகையில் அரசாங்கத்தின் இந்த வர்த்தமானிப் பிரகடனத்தை நாம் பார்க்கின்றோம். அதுவும் தாங்கள் ரஷ்யாவில் இருக்கும் போது இந்த வர்த்தமானிப் பிரகடனம் வெளியிடப்பட்டமை எமக்குக் கவலை தருகின்றது.

வில்பத்து இயற்கை சரணாலயத்தில் ஓர் அங்குல நிலத்தையேனும் அபகரிக்காத முஸ்லிம் சமூகத்தின் மீது அபாண்டமான பழிகளை சுமத்தி வரும் இனவாதிகளுக்கு புதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் தீனி கிடைத்துள்ளது என்பதையும் தங்களின் மேலான கவனத்தில் கொள்ளவேண்டும் எனவும் அமைச்சர் றிஷாத் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புதிய வர்த்தமானி அறிவித்தலால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் தெரிவித்த அமைச்சர் றிஷாத், அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்து வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்ய உதவ வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

# அதிகாரப் பகிர்வில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையாகத் திருப்தி அடைவதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மேலும். வழிநடத்தல் குழுவின் அறிக்கையை பொறுத்தே தமது அடுத்தக்கட்ட நடவடிக்கையை எடுக்க முடியும் எனவும் அவர் கூறினார்.

புதிய அரசமைப்பை ஸ்தாபிக்கும் பணிகள் தற்போது மும்முரமாக இடம்பெற்று வரும்நிலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் 6 உபகுழுக்களின் அறிக்கைகளும் முன்வைக்கப்பட்டன.

இந்த அறிக்கைகள் தொடர்பில் ஒவ்வொருக் கட்சிகளும் தனித்தனியே ஆராய்ந்து தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்கு இணங்க, ஏப்ரலில் வழிநடத்தல் குழுவின் விரிவான அறிக்கையொன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தற்போது கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், இதுவிவகாரம் தொடர்பில் நேற்று நவமணிக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அதாவது, தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையாகத் திருப்திக் கொள்கின்றது. இதில், அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் மிக விரிவாக ஆராயப்பட்டுள்ளமையை இட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

பொலிஸ், காணி அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்குவது குறித்தும் கூறப்பட்டுள்ளமையால் இது சிறுபான்மையினத்தவருக்கு நன்மையாகவே இருக்கும். எனினும், இதுகுறித்து அடுத்த ஏப்ரலில் முன்வைக்கப்படவுள்ள வழிநடத்தல் குழுவின் அறிக்கையை பொறுத்தே எமது முடிவினை இறுதியாக அறிவிக்க முடியும்.

அத்தோடு, ஏப்ரல் 4 அல்லது 5 ஆம் திகதிகளில் வழிநடத்தல் குழு கூடி, அதன் அறிக்கையை பாராளுமன்றில் சமர்ப்பிப்பது குறித்த திகதியை அறிவிக்கவுள்ளது என்றும் தற்போது தொடர்ச்சியாக அரசமைப்பு தொடர்பிலான பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் கூறினார்.

# இந்த ஆண்டு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

29 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையகத்தில் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மாகாண முதலமைச்சர்களுகக்கும் இடையிலான விசேட கூட்டமொன்று நேற்று முன்தினமிரவு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இதில் 7 மாகாணத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் முதல்வர்கள் கலந்து கொண்டதுடன் சமகால அரசியல் நிலவரங்கள், தேர்தல் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பிலும் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டது.

இதன்போதே, மேற்படி மூன்று மாகாணங்களுக்குமானத் தேர்தல் இவ்வருட இறுதிக்குள் இடம்பெறும் என்றும் எனவே, இதற்காக மாகாண முதல்வர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்தார்.

அதேநேரம், தேர்தல் ஆணையகத்தினால் கூட்டப்படும் நீதித்துறை உறுப்பினர்களின் கூட்டம் இன்று(29) நடைபெறவுள்ளதோடு, இத்தினத்தில் தேர்தல் தொடர்பிலான முக்கிய முடிவுகளும் எடுக்கப்படவுள்ளதாக தேர்தல் ஆணையகம் தெரிவித்தது.

மேலும், உள்ளூராட்சி சபை தேர்தல் பிற்போடப்படுதல் தொடர்பிலும் மற்றும் அது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பிலும் இந்த நீதித்துறை உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, செப்டம்பர் மாதத்தில் பதவிக்காலம் முடிவடையவுள்ள கிழக்கு மாகாணம், வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் 3 இல் தேர்தல் நடைபெறுவது தொடர்பில் முக்கிய தீர்மானம் ஒன்றும் இக்கலந்துரையாடலில் எட்டப்படவுயள்ளது.

இந்த நீதித்துறை உறுப்பினர்கள் குழுவில் தேர்தல் ஆணையகத்தினால் பதிவுசெய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்களும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்தல் கவனிப்பு அமைப்புக்களின் உறுப்பினர்களும் இதில் உள்ளடங்குவர்.

மேலும், இம்முறை தீர்மானிக்கப்பட்டுள்ள 25 வீதமான பெண்கள் பிரதிநிதித்துத்தை உள்ளடக்கி பழைய முறையில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் கட்சி செயலாளர்கள் சிலர் தீர்மானங்களை முன்வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஓ.எல். முடிவுகள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை ரீதியாக முதலாவது இடத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

கண்டி மஹா மாயா மகளிர் வித்தியாலயத்தின் எஸ்.எம்.முனசிங்க இரண்டாவது இடத்தையும், கொழும்பு ஆனந்த கல்லூரி ஆர்.எம்.சுகத் ரவீந்திர சன்வர மற்றும் மாத்தறை ராஹுல வித்தியாலயத்தின் திமுத் ஒசதி மிரிஸ்கமகே ஆகிய இருவரும் அகில இலங்கை ரீதியாக மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

2016ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் யாழ். இந்துக் கல்லூரியின் மாணவன் ஏ.அபிநந்தன் அகில இலங்கை ரீதியாக ஐந்தாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அந்தவகையில், கம்பஹா ரத்னாவலி மகளிர் வித்தியாலயத்தின் எச்.பி.பவசரா மலிதி குமாரி ஹேரத் 4 ஆவது இடத்தையும் பிடித்துள்ளதோடு, 5 ஆவது இடத்தை மூன்று மாணவர்கள் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

அதாவது, கொழும்பு தேவி பாலிகா வித்தியாலயத்தின் டி.எம்.ரனுமி தியரணி நாணயக்கார, காலி சங்கமித்தா மகளிர் வித்தியாலயத்தின் ஏ.தம்சரா மெதாவி, யாழ்ப்பாணம் ஹிந்து கல்லூரி மாணவர் ஏ.அபிநந்தன் ஆகியோரும் பெற்றுள்ளனர்.

மேலும், 6 ஆவது இடத்தை 2 காலி சவுத்லன்ட் வித்தியாலயத்தின் கே.ஜி.ஜி.ஈ.ரன்தினி டி சில்வா, மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தின் ஈ.ஏ.யசாரா உமாஷி ஆகிய இருவர் பெற்றுள்ளனர்.

தமிழ் மொழி மூலம் யாழ் மாணவன் முதலிடம் யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தையும், தமிழ் மொழி மூலம் தேசிய மட்டத்தில் முதலாமிடத்திலும், தேசிய மட்டத்தில் 5 ஆம் இடத்தினையும் யாழ். இந்து கல்லூரி மாணவன் அ.அபிநந்தன் பெற்றுகொண்டுள்ளார்.

உயிரியல் விஞ்ஞான துறையில் தொடர்ந்து கல்விகற்பதற்கு தாம் விரும்புவதாகவும் அது தவறினால் நோய்கள் தொடர்பான ஆய்வுத்துறையில் கல்வியை கற்க விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

தனது வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துள்ளதோடு, தனது பெற்றோர் மற்றும் சித்தியின் ஊக்கமளிப்பினால் தான் சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொண்டதாக குறித்த மாணவன் தெரிவித்தார்.

இப்பரீட்சையின் பெறுபெறுகள் நேற்றைய தினம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு, தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளும் தாபல் மூலம் அனுப்படவுள்ளதாக திணைக்களம் தெரிவித்தது.

பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான மேலதிக விபரங்களை 1911 என்ற அவசர தொலைபேசி இலக்கம் ஊடாக தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்றும் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்க வேண்டும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்தார்.

அத்தோடு, இம்முறை சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் வீதம் ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது அதிகரித்துள்ளதாக கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கணிதம் போன்ற பாடங்களில் சித்தியடைந்தவர்களின் வீதம் இம்முறை உயர் மட்டத்தில் காணப்படுகின்றதென்று பரீட்சைகள் ஆணையாளர் தனக்கு அறிவித்ததாக கல்வியமைச்சர் தெரிவித்தார்.

வருங்காலத்தில் நாட்டின் கல்வியில் பல்வேறு சீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட உள்ளதுடன், 13 ஆண்டுகளுக்கு தொடர்ச்சியான கல்வியை வழங்குவதற்கான வேலைத் திட்டத்தின் மாதிரியை இந்த ஆண்டில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சர் தொடர்ந்தும் கூறினார்.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் 5 இலட்சத்து 51 ஆயிரத்து 340 மாணவர்கள் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இனவாதிகளுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

திட்டமிட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு முஸ்லிம்ளை மீள்குடியமர்த்தாமையினாலேயே இவ்வாறான பிரச்சினை தோன்றியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து முஜிபுர் ரஹ்மான் எம்.பி. மேலும் குறிப்பிடுகையில்,

மறிச்சிக்கட்டி, மாவில்லு, வெப்பல், விளாத்திக்குளம், பெரியமுறிப்பு உள்ளடங்கிய பகுதிகள் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த பகுதிகளாகும். அதற்கான ஆவணங்கள் பலவும் அங்குள்ள மக்களிடம் இருக்கின்றன. இது குறித்து ஜனாதிபதி பரிசீலிக்காது ஜனாதிபதி தீர்மானம் எடுத்திருப்பதும் மிகவும் தவறானதாகும். அவர் கையொப்பமிட்ட வர்த்தமானி அறிவித்தலை வாபஸ்பெற வேண்டும்.

வடக்கில் முப்பது வருடகாலம் யுத்தம் நீடித்தது. இதில் இடம்பெற்ற மிக மோசமான விவகாரமே இன சுத்திகரிப்பின் அடிப்படையிலான வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றமாகும். முஸ்லிம்கள் வடக்கிலிருந்து விடுதலை புலிகளினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு 27 வருடங்களாகின்றன. அத்துடன் யுத்தம் நிறைவடைந்து 8 ஆண்டுகள் நிறைவடைந்தும் இந்த முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கான எந்தவொரு திட்டத்தையும் மஹிந்த அரசாங்கமே இந்த நல்லாட்சி அரசாங்கமோ முன்வைக்கவில்லை.

முஸ்லிம்கள் அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டு மீள்குடியேற்றப்பட்டிருப்பின் வில்பத்து பிரச்சினையே வந்திருக்காது. முன்னாள் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி ஆணைக் குழு (எல்.எல்.ஆர்.சி) யின் அறிக்கையின் பிரகாரம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த இடத்தில் மீள்குடியேற்றப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எல்.எல்.ஆர்.சி. அறிக்கையையும் மீறியிருக்கிறார்.

அவர் இனவாதிகள் தயாரித்து வழங்கிய திட்டத்தை அமுல்படுத்துவதற்கு எத்தனிக்கிறார். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜனாதிபதி இனவாதிகளை அழைத்து அவர்களுடன் ஜனாதிபதி மாளிகையில் கலந்துரையாடினார். ஆனால் 30 வருட யுத்ததால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண முஸ்லிம் மக்களுடன் எவ்வித கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை. அவர்களின் கருத்துக்கள் தொடர்பில் ஆராய்வதற்கும் ஜனாதிபதி முயற்சிக்கவில்லை.

மாறாக நாட்டில் இனவாதத்தை பரப்பி மற்றுமொரு யுத்தத்தை ஏற்படுத்த முயற்சித்த கடும்போக்கு வாதிகளின் சதியில் ஜனாதிபதி சிக்கியுள்ளார். அவர்களின் திட்டத்திற்கு அடிபணிந்திருக்கிறார். இது இன்னுமொரு பாரிய பிரச்சினையையே தோற்றுவிக்கும்.

வடக்கில் தமிழ் மக்கள் தமது சொந்த நிலத்தை பெற்றுக்கொள்ள தொடர்ந்தும் போராடிக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு தீர்வொன்றை வழங்காத ஜனாதிபதி மற்றுமொரு சிறுபான்மையினமான முஸ்லிம்களின் பூர்வீகத்தை கையகப்படுத்தி பிரிதொரு பிரச்சினைக்கு வழிவகுக்கிறார். இது பெரும் அபாயகரமான சூழலாகும்.

இதனால் வடக்கு முஸ்லிம்களுக்கு பாரியதொரு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. நல்லாட்சி அரசாங்கத்தின் பிழையானதொரு முடிவாகும். இனவாதம் தலைதூக்குவதற்கும் வழிவகுக்கும்.

காடுகள் இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கு நாம் இடையூறானவர்கள் அல்ல. நாம் இயற்கையை அதிகம் நேசிக்கக்கூடியவர்களே. ஆனால் வில்பத்து விவகாரத்தில் வடக்கிலுள்ள முஸ்லிம் மக்கள் அநியாயமாக நசுக்கப்படுகின்றனர். அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களின் கருத்துக்கள் அறியப்பட வேண்டும். இப்பிரச்சினையை சுமூகமாக தீர்ப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவேண்டும்.

இதனை விஞ்ஞானபூர்வமாக தீர்க்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்காதொரு திட்டம் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட வேண்டும். இதனூடாக அம்மக்களின் நலன்கள் பேணப்பட வேண்டும் என்றார்

# குற்றத் தடுப்பு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பஷீர் சேகுதாவூதிடமிருந்து வாக்குமூலம் பெறப்பட்டதாக கொழும்பு குற்றவியல் பிரிவு தெரிவித்தது.

சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீனுடன் சென்றே பஷீர் வாக்குமூலமளித்தார்.

'மறைக்கப்பட்ட மர்மங்கள்' தொடர்பான நூலை வெளியிட்ட அச்சக உரிமையாளரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த அச்சக உரிமையாளர் தெரிவித்திருந்த தகவலின்படியே குறித்த புத்தகம் தொடர்பாக பஷீர் சேகுதாவூத் வாக்குமூலம் அளிப்பதற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

பஷீர் நேற்று அளித்த வாக்குமூலம் தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பப்படும் என பொலிஸார் தெரிவித்ததாக சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் தெரிவித்தார்.

# நடராஜா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

குற்றம் சுமத்தப்பட்டிருந்த 6 பேரில் ஒருவர் விசாரணைக் காலத்தின்போதே உயிரிழந்தார். மேலும், ஏனைய இருவரும் நீதிமன்றில் முன்னிலையாகாமல் இருந்த காரணத்தினால், ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்த ஏனைய மூவரையும் குற்றமற்றவர்கள் என்று மேல்நீதிமன்றம் விடுவித்தது.

இதனை அடுத்து குறித்த வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு கோரி, நடராஜா ரவிராஜின் மனைவி சசிகலா நடராஜா தரப்பினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த சீராய்வு மனுவின் அடிப்படையில் நேற்றைய தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் இந்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சசிகலா ரவிராஜின் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணியால், வழக்கு தொடர்பான அறிவிப்புக் கடித்தை குற்றம் சுமத்தப்பட்டுள்ள 3 பேரிடமும் சேர்க்க முடியாதிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

அதாவது, குறித்த மூன்று பேரும் அவர்களின் முகவரியில் இருந்து வெளியேறியுள்ளமையே இதற்கான காரணமாகும் என்பதால் அவர்களை குற்றப் புலனாய்வு பிரிவின் ஊடாக தேடுவதற்கு உத்தரவிடுமாறு சசிகலா தரப்பினரால் கோரப்பட்டமைக்கு அமையவே, மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்படி உத்தரவை பிறப்பித்தது.

இந்த வழக்கு தொடர்பிலான அடுத்தக் கட்ட விசாரணை எதிர்வரும் ஜுன் மாதம் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஹம்பாந்தோட்டை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அத்தோடு, இவ்விவகாரத்தில் எவ்வாறான முடிவினை எடுக்கப்போகிறார் என்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நாட்டு மக்கள் தீவிரமாக அவதானித்து வருவதாகவும் அவர் கூறினார்.

பொரளையில் அமைந்துள்ள வஜிர சர்மா பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்விடயத்தை குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசிலுள்ளவர்கள் தமது பைகளை நிரப்பிக் கொள்ள வேண்டும் என தீவிரமாக செயற்பட்டு வருகிறார்கள். இதனால் ஏற்படும் கடன் சுமையிலிருந்து நாட்டை மீட்பதற்காக பொதுச் சொத்துக்களை விற்கும் நடவடிக்கையிலும் அரசு ஈடுபடுகின்றது. அந்தவகையில், அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

நான் இதுவரை பாரத்த சர்வதேச ஒப்பந்தங்களிலேயே நாட்டுக்கு மிகவும் பாதிப்பினை எற்படுத்தக் கூடிய ஒப்பந்தமாகவே இந்த ஹம்பாந்தோட்டை துறைமுக தொடர்பான ஒப்பந்தம் காணப்படுகின்றது. இந்த ஒப்பந்தமானது நாட்டின் அரசியலமைப்புக்கே முரணான ஒன்றாகும்.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் பெறுமதியினை வெறுமனே நிலத்தின் பரப்பினை கொண்டு மதிப்பிடப்பட்டுள்ளதுடன் அதன் அடிப்படையிலேயே இந்த துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இதன் பிரகாரம் 80 வீத துறைமுகத்தின் பங்குகள் சீனநிறுவனத்துக்கும் 20 வீத பங்குகள் துறைமுக அதிகார சபைக்கும் வழங்கப்படவுள்ளது.

சீனாவிற்கு கிடைக்கும் இந்த பங்குகள் மீண்டும் இலங்கைக்கு வழங்கப்பட்டும் போது இது அப்போதைய சர்வதேச மதிப்பீட்டின் பிரகாரமே வழங்கப்படும். அக்காலத்தில் குறித்த நிலப்பகுதியின் மதிப்பானது மிகவும் அதிகமாக காணப்படுவதோடு இலங்கையினால் தாங்கிகொள்ள முடியாத பெறுமதிக்கு இந்த பங்குகள் மீண்டும் இலங்கைக்கு விற்கப்படுவதால் குத்தகை முடியும் காலத்துக்கு முன்னர் இந்த துறைமுகத்தின் பங்குகளை இலங்கையால் பெற்றுக்கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

ராஜபக்ஸ அரசினால் பெற்ற கடனை செலுத்துவதந்காகவே இந்த துறைமுகததின் பகுதிகள் விற்கப்படுவதாக அரசு கூறினாலும் இத்துறைமுகத்தை குத்தகைக்கு வழங்குவதனூடாக பெற்றுக் கொள்ளப்படும் பணத்தை கடன் செலுத்துத்துவதற்கு பயன்படுத்த போவதில்லை என்பதும் தற்போது தெளிவாக தெரிந்து விட்டது.

மேலும், இத்துறைமுகத்தில் பணிபுரியும் ஊழியர்களின் எதிர்காலத்துக்கான பாதுகாப்பினையும் அரசு இதுவரை பெற்றுக்கொடுக்கவில்லை. எமது நாட்டில் அதிகாரம் பொருந்திய ஒரே தலைவர் ஜனாதிபதி மட்டுமே. அத்தோடு அரச தலைவராகவும் அவரே கருதப்படுகிறார். அரசியலமைப்பின் பிரகாரம் நாட்டின் சொத்துக்களை பாதுகாப்பேன் என வாக்குறுதியளித்து அப்பதவியில் அமர்ந்திருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாட்டின் சொத்தினை வெளிநாட்டுக்கு தாரை வார்த்துகொடுக்கும் இந்த செயல் குறித்து நாட்டுமக்கள் மிகவும் அவதானத்துடனேயே இருக்கிறார்கள் என்றார்.

# தகவல் பணிப்பாளர் ஹில்மி முஹம்மதின் மைத்துனர் காலமானார்

மள்வானை ஜும்ஆ மஸ்ஜித் செயலாளர் எம்.எஸ்.அப்துல் காதர் (49) நேற்று காலமானார்.

இவர் தகவல் திணைக்களப்பணிப்பாளர் ஹில்மி ஹில்மி முஹம்மதின் மனைவியின் சகோதரராவார்.

ஜனாஸா இன்று காலை ரக்சபான ஜும்ஆப்பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

# பரீட்சையில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்றது.

2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சையின் 07 பாடப் பிரிவுகளிலும் முதல் 05 நிலைகளைப் பெற்றுக்கொண்ட 35 மாணவ மாணவியரும், 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற 05 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் அதிக புள்ளிகளைப் பெற்ற 12 மாணவ மாணவியரும் இதன்போது பாராட்டு பெற்றனர்.

மாணவர்களின் திறமையை மெச்சிய ஜனாதிபதி, அவர்களுக்கு தனது வாழ்த்தை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம், மக்கள் வங்கி மற்றும் இலங்கை சிங்கர் நிறுவனம் ஆகியவற்றின் பங்களிப்புடன் அவர்களுக்கு பணப் பரிசில்களும், மடிக் கணனிகளும் இதன்போது ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப்பட்டன.

கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் உள்ளிட்ட கல்வியமைச்சின் உயர் அதிகாரிகளும், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

# இரத்த...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சீனியின் அளவு அதிகரித்துள்ளது என்று அவர் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான பத்மஉதயசாந்த குணசேகர தெரிவித்தார்.

மேலும், இந்த நிலைமை இன்னும் ஓரிடண்டு நாட்களுக்குத் தொடருமாக இருந்தால் அரச வைத்தியசாலைக்கு விமலை மாற்ற வேண்டிய நிலைமை ஏற்படும் என வைத்தியர்கள் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

வாகன மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் விமல் வீரவன்ஸ, தனது பிணை மனுவானது தொடர்ந்தும் மறுக்கப்பட்டுவருகின்றமைக்கு எதிராக கடந்த 21 ஆம் திகதி முதல் உண்ணாவிரதமிருந்து வருகிறார்.

7 நாட்களுக்கும் மேலாக இவ்வாறு உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுவந்த விமல், கடந்த ஞாயிறன்று உடல் நலக் குறைவுக் காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில், இவரின் உடன்நிலைமை குறித்து நவமணிக்கு குறிப்பிடுகையிலேயே உதயசாந்த எம்.பி., மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது, நாட்டுக்காகவும் சர்வதேச அழுத்தங்களுக்கு எதிராகவும் போராடிய ஒருவர் தற்போது சிறைச்சாலையில் இருக்கிறார். இப்படியான போராட்டவாதிகளுக்கு இறுதியில் இந்நிலைமைத் தான் ஏற்படும் என்பதற்கு விமல்வீரவன்ஸ ஒரு சிறந்த உதாரணமாக இருக்கிறார்.

எனினும், அரசின் அழுத்தங்களுக்கெல்லாம் அடிபணிந்து உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ள மாட்டேன் என்பதில் அவர் தொடர்ந்தும் உறுதியாகவே இருந்துவருகிறார்.

# Sports
## விளையாட்டுச் செய்திகள்



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்ற இந்திய அணி,

## இந்திய அணிக்கு டெஸ்ட் மகுடம்

டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்திற்கான அதற்கான மகுடத்தையும் நேற்று பெற்றுக்கொண்டது.

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.,) சார்பில் அணி மற்றும் வீரர்களுக்கான தரவரிசை வெளியிடப்படும். தரம்சாலா டெஸ்ட் ஆரம்பமாவதற்கு முன், முதல் மூன்று இடங்கள் முறையே இந்தியா (121 புள்ளி), அவுஸ்திரேலியா (109), தென்னாபிரிக்கா (107) அணிகள் இருந்தன. தற்போது, தரம்சாலா டெஸ்ட் போட்டியை வென்றதன் மூலம் இந்திய அணி ஒரு புள்ளியை கூடுதலாகப் பெற்று தொடர்ந்து (122) முதலிடத்தில் நீடிக்கிறது.முன்னதாக 2016 ஒக்டோபர் மாதம் நியூசிலாந்தை இந்தூர் டெஸ்ட் போட்டியில் வீழ்த்திய பிறகு இந்திய அணி டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பிடித்தது. இதனையடுத்து, ஏப்ரல் முதலாம் திகதியை அடிப்படையாக வைத்து ஐ.சி.சி., சார்பில் வழங்கப்படும் ஒரு மில்லியன் ரூபா பரிசுத்தொகையுடன், முதலிடத்திற்கான கதாயுதத்தையும் வென்றது. இதை, இந்திய முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் விராத் கோஹ்லியிடம் வழங்கினார்.

தென்னாபிரிக்கா, நியூசிலாந்து அணிகள் மோதும் ஹெமில்டன் டெஸ்ட் முடிந்தபின்தான் இரண்டாவது இடம் பிடிக்கும் அணி பற்றி தெரியவரும்.இதன்படி, 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொள்ளும் அணிக்கு 5 இலட்சம் டொலர்கள் பரிசாகக் கிடைக்கவுள்ளதுடன், 3ஆம் இடம் பிடிக்கும் அணிக்கு 2 டொலர்கள் ஐ.சி.சியினால் வழங்கப்படவுள்ளமை

## தர்மசாலா டெஸ்ட்டை வென்று தொடரைக் கைப்பற்றியது இந்தியா




அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இந்தியா - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான போர்டர்-கவாஸ்கர் டெஸ்ட் தொடரை இந்திய அணி 2-1 என கைப்பற்றியது. அணித் தலைவர் விராட் கோஹ்லி உபாதையின் காரணமாக அணியிலிருந்து விலக, அணித் தலைவராக செயற்பட்ட அஜிங்கே ரஹானி சிறப்பான வெற்றியை இந்திய அணிக்கு பெற்றுக்கொடுத்தார்.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 300 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.அவ்வணி சார்பாக அணித் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் 111 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டார்.இந்தியத் தரப்பில் அறிமுக வீரர் குல்தீப் யாதவ் 4 விக்கெட்டுகளையும், உமேஷ் யாதவ் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 332 ஓட்டங்களை பெற்றது.அவ்வணி சார்பாக லேகேஸ் ராகுல் 60 ஓட்டங்களையும், ஜடேஜா 63 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர். அவுஸ்திரேலியா சார்பில் நெதன் லயன் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்நிலையில் 32 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸி அணி 137 ஓட்டங்களுக்கு சுருண்டது.பந்துவீச்சில் ஜடேஜா, அஸ்வின் மற்றும் யாதவ் தலா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதனையடுத்து 106 ஓட்டங்களை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இந்திய அணி சார்பில் கே.எல். ராஹுல் போட்டியின் இறுதிப்பந்தில் இரண்டு ஓட்டங்களை பெற்றதனூடாக தனது அரைச்சதத்தை பதிவு செய்து 52 ஓட்டங்களை பெற்றார். மறுமுனையில் அணித் தலைவர் ரஹானி 38 ஓட்டங்களை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஆட்ட நாயகன், தொடர் நாயகன் இரண்டு விருதுகளையும் ஜடேஜா தட்டிச் சென்றார். இந்தத் தொடரில் 25 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார், 127 ஓட்டங்கள் அதில் இரண்டு அரைச்சதங்கள் உள்ளடங்குகின்றன.

இதன்படி 2016-2017 பருவகாலத்தில் இந்திய அணி சொந்த மண்ணில் நியூசிலாந்து, இங்கிலாந்து, பங்களாதேஷ், அவுஸ்திரேலிய ஆகிய அணிகளை எதிர்கொண்டது. இதில் அனைத்து டெஸ்ட் தொடர்களையும் வென்று சாதனை படைத்துள்ளது.



### 23 வயதிற்குட்பட்ட ஆசிய கிண்ண கிரிக்கெட்:
## அசலங்கவின் அபார சதம் இலங்கைக்கு முதல் வெற்றி

ஆசிய கிரிக்கெட் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்றுவருகின்ற 23 வயதிற்குட்பட்டவர்களுக்கான ஆசியக் கிண்ணத்தின் 2ஆவது நாளான நேற்று சரித் அசலங்கவின் அபார சதத்தினால் ஆப்கானிஸ்தான் இளையோர் அணியை இலங்கை இளையோர் அணி 35 ஓட்டங்களால் வீழ்த்தி தொடரில் முதலாவது வெற்றியைப் பதிவு செய்தது. பங்களாதேஷின் சிட்டகொங் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 320 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.இலங்கை அணியின் முன்வரிசை வீரர்கள் குறைந்தளவு ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, இலங்கை அணி சார்பாக அபார துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்த சகலதுறை வீரர்களான சரித் அசலங்க மற்றும் அணித் தலைவர் அஞ்சலோ பெரேரா ஆகியோரின் இணைப்பாட்டத்தினால் அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கை வலுவான ஓர் நிலைக்குச் எடுத்து சென்றது.இதில் அஞ்சலோ பெரேரா 84 ஓட்டங்களையும், சரித் அசலங்க 105 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர்.பந்துவீச்சில் ஆப்கானிஸ்தான் அணி சார்பாக நவீன் உல் ஹக் மற்றும் பசால் நியாசை ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதனையடுத்து 320 என்ற இமலாய இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 47.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 285 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது.துடுப்பாட்டத்தில் ஆப்கானிஸ்தான் அணி சார்பாக நஜிபுல்லாஹ் சத்ரான் 87 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக அமில் அபோன்சோ 3 விக்கெட்டுக்களையும், அசித பெர்னான்டோ மற்றும் சாமிக கருணாரத்ன தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இந்நிலையில், முதலாவது போட்டியில் இலங்கை அணி 35 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.







சாய்ந்தமருது லம்கோ விளையாட்டுக்கழகத்தின் புதிய சீருடை அறிமுக கடினபந்து கிரிக்கெட் சிநேகபூர்வ போட்டி கடந்த 24ஆம் திகதி சாய்ந்தமருது பொது மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் சாய்ந்தமருது லம்கோ விளையாட்டுக்கழகத்தினரை எதிர்த்து சாய்ந்தமருது கிங்கோசஸ் விளையாட்டுக்கழகத்தினர் மோதியிருந்தனர்.அந்தவகையில் ஆரம்பத்தில் துடுப்பெடுத்தாடிய லம்கோ விளையாட்டுக்கழகத்தினர் 18 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து மொத்தமாக 165 ஓட்டங்களைப் பெற்றனர்.பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது கிங்கோசஸ் கழகத்தினர் 18 ஓவர்களில் 111 ஓட்டங்களைப்பெற்றுக்கொள்ள,சாய்ந்தமருது லம்கோ விளையாட்டுக்கழகத்தினர் 55 ஓட்டங்களால் வெற்றியைப் பதிவு செய்தனர்.வெற்றிபெற்ற அணித்தலைவருக்கு வெற்றிக் கிண்ணமும் பிரதம அதிதிகளால் வழங்கப்பட்டது. (ஜி.முஹம்மட் றின்ஸாத்)

## யு-17 உலகக்கிண்ண கால்பந்து: கொல்கத்தாவில் இறுதிப் போட்டி!




இந்தியாவில் நடைபெறவுள்ள 17 வயதுக்குட்பட்டோருக்கான (யு-17) உலகக் கிண்ணம் கால்பந்து போட்டிக்கான ஆரம்ப அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

17 வயதுக்குபட்டோருக்கான உலகக்கிண்ணம் கால்பந்து போட்டி எதிர்வரும் ஒக்டோபர் 6ஆம் முதல் 28ஆம் திகதி வரை இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவி மும்பை, புது டில்லி, கோவா, கொச்சி, குவஹாட்டி, கொல்கத்தா ஆகிய நகரங்களில் போட்டி நடைபெறவுள்ளது.

அனைவரும் எதிர்பார்க்கும் இறுதிப் போட்டி கொல்கத்தாவில் உள்ள சால்ட் லேக் மைதானத்தில் ஒக்டோபர் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது. குவஹாத்தி மற்றும் நவி மும்பையில் அரையிறுதி போட்டிகளும், காலிறுதி போட்டிகள் கோவா, குவஹாட்டி, கொச்சி, கொல்கத்தா ஆகிய நகரங்களிலும் நடைபெறுகின்றன. இந்நிலையில், ஒக்டோபர் 6ஆம் திகதி புதுடில்லி மற்றும் நவி மும்பை ஆகிய இரு நகரங்களிலும் உலகக்கிண்ணப் போட்டிகள் தொடங்குகிறது.

இம்முறை போட்டித் தொடரில் இந்தியா உள்ளிட்ட 24 நாடுகள் பங்கேற்கின்றன. இந்நிலையில் பிபாவின் 21 உறுப்பினர்கள் கொண்ட குழுவானது, இந்தியாவில் உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறும் மைதானங்களை ஆய்வு செய்தது. இதன்படி, டெல்லி, கோவா, கொச்சி, நவி மும்பை, கவுகாத்தி ஆகிய 5 மைதானங்களை ஆய்வு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கோஹ்லி விலகல்? ஏபிடி தலைவராகிறார்



ராஞ்சியில் நடைபெற்ற 3ஆவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் முதல் இன்னிங்ஸின்போது பவுண்டரியைத் தடுக்க முயன்ற இந்திய அணித் விராட் கோஹ்லிக்கு வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. அதன் காரணமாக அவருக்கு ஓய்வு அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ராஞ்சி டெஸ்டிலேயே அவர் களம் இறங்கினார். எனினும், சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

காயத்தின் காரணமாக அவர் தர்மசாலா டெஸ்ட் போட்டியில் இடம்பெறவில்லை. இந்நிலையில் கோஹ்லி, ஐ.பி.எல் போட்டியில் பங்கேற்பதற்காக தர்மசாலா டெஸ்ட் போட்டியிலிருந்து விலகினார் என்கிற விமர்சனங்களும் எழுந்தன. இந்நிலையில் தனது காயம் குறித்து நேற்று கோஹ்லி கூறியதாவது: ஆடுகளத்தில் நான் நூறு சதவிகிதம் உடற்தகுதியுடன் இருப்பதற்கு இன்னும் சில வாரங்கள் ஆகும் என்று தகவல் கூறியுள்ளார்.

கோஹ்லி, பெங்களூர் அணியின் தலைவராக உள்ளார். ஐபிஎல் போட்டி ஏப்ரல் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. முதல் ஆட்டமே ஹைதராபாத் - பெங்களூர் அணிகளுக்கு இடையேதான். ஹைதராபாத்தில் இப்போட்டி நடைபெறுகிறது. எனினும், கோஹ்லி தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் பெங்களூர் அணியின் ஆரம்ப ஆட்டங்களில் கோஹ்லி இடம்பெற வாய்ப்பில்லை என்று அறியப்படுகிறது.இந்நிலையில், அவ்வணியின் மற்றுமொரு வீரரான தென்னாபிரிக்காவின் ஏ பி டிவில்லியர்ஸ் பெங்களூர் அணியின் தலைவராகச் செயற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## மென்செஸ்டர் கால்பந்து கல்வியகம் கொழும்பில் அங்குரார்ப்பணம்





பீ.எப்.எம் றிஷாட்

இலங்கையின் கால்பந்து விளையாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கில் சிறுவர்களுக்கான கால்பந்தாட்டப் பயிற்சிகளுடன் மென்செஸ்டர் கால்பந்தாட்டக் கல்வியகம் கடந்த சனிக்கிழமை கொழும்பு குதிரைப்பந்தயத்திடல் மைதானத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைஸர் முஸ்தாபின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில் சுமார் 300 சிறுவர்களும் 15க்கும் மேற்பட்ட சிறுமிகளும் கலந்துகொண்டு கால்பந்தாட்ட அடிப்படைப் பயிற்சிகளை இலவசமாகப் பெற்றுக்கொண்டனர். இதனைத் தொடர்ந்து வார இறுதி நாட்களில் நாரஹேன்பிட்ட ஷாலிகா மைதானத்திலும் பொரளை எம். எச். மொஹமத் மைதானத்திலும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

ஒகஸ்டின் ஜோர்ஜ் தலைமையில் மென்செஸ்டர் கால்பந்தாட்டக் கல்வியகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்து கால்பந்தாட்டக் கல்வியகங்களில் மென்செஸ்டர் கால்பந்தாட்டக் கல்வியகம் 13 முன்னாள் தேசிய வீரர்கள், ஒரு முன்னாள் தேசிய வீராங்கனை ஆகியோரின் முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.







யாழ்.ஒஸ்மானியா கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அல் ஹதீஜா முன்பள்ளி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வின் போது யாழ். எழுத்தாளர் எம்.எப்.எம். இக்பால் கொடியேற்றுவதையும், முன்பள்ளி மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுவதையும் பரிசில்கள் பெறுவதையும் ஆசிரியை கௌரவப்படுத்தப்படுவதையும் படங்களில் காணலாம்.

## சக்லைனுக்கு பதவி நீடிப்பு



பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரரும், நட்சத்திர சுழற்பந்துவீச்சாளருமான சக்லைக் முஷ்டாக், வருடமொன்றுக்கு 100 நாட்கள் என்ற அடிப்படையில் எதிர்வரும் 2 வருடங்களுக்கு இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சுழற்பந்துவீச்சு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணிக்கெதிராக நடைபெற்ற டெஸ்ட் தொடரிலும் இங்கிலாந்து அணியின் சுழற்பந்துவீச்சு ஆலோசகராக செயற்பட்ட சக்லைன், நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள் மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகளின் சுழற்பந்துவீச்சு ஆலோசகராகவும் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.அதனைத் தொடர்ந்து கடந்த வருடம் இந்திய சுற்றுப்பயணத்துக்கான இங்கிலாந்து அணியின் சுழற்பந்துவீச்சு ஆலோசகராக பாகிஸ்தான் அணியின் முன்னாள் சுழற்பந்துவீச்சுநட்சத்திரம் சக்லைன் முஷ்டாக் செயற்பட்டிருந்தார்.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 29TH MARCH 2017